# "சிங்கள-தமிழ் மாணவருக்கு ஒரேவித சலுகைகள்"

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (7-10-66) இதழ் 238
பராபவ புரட்டாதி 21 ஜ! ஆகிர் 21 வெள்ளிக்கிழமை




## பட்டிருப்பில் மந்திரி தஹா

களுவாஞ்சிக்குடி, வியா
"சிங்கள பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப் பட்டிருக்கிறதோ, அதே போல் தமிழ் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படும். தேசிய அரசாங்கம் எந்த மாணவர்களுக்கும்பாகு பாடு காட்டாது"

பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உள்நாட்டு மந்திரி டபிள்யு. தஹநாயக்கா மேற்கண்டவாறு கூறினர். இக் கூட்டத்திற்கு அதிபர் திரு. கே. அருணாசலம் தலைமை தாங்கினர்.

பட்டிருப்பு தொகுதியில் பல்வேறு இடங்களிலும், மந்திரி தஹநாயக்காவிற்கு பொது மக்களால்வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்புகளில் பட்டிருப்பு எம். பி, திரு. எஸ். எம்

(8-ம்பக்கம் பார்க்க)

போதனுமொழி; சிங்கள ஆசிரியர் நியமனம்

# தமிழரசு (கொழும்பு) கிளை கண்டனம்

## கொள்கையை புறக்கணிப்பதாக தலைமைப்பீடம்மீது குற்றச்சாட்டு

கொழும்பு, வியாழன்

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவது பற்றியும் தமிழ் பேசும் பிள்ளைகளின் போதனுமொழி சம்பந்தமாகவும் தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடம் நடந்துகொண்ட முறைபற்றியும் இன்றுகாலை நடைபெற்ற கொழும்பு தமிழரசுக்கட்சிக் கிளைக்கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு திரு. கே. சிவானந்த சுந்தரம் தலைமை வகித்தார்

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் முக்கியமாக சிங்கள ஆசிரியர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவது பற்றியும், போதனுமொழிபற்றி தங்கள் அரசியல் கொள்கைகளைக் கைவிட்டு ஐக்கிய தேசியக்கட்சியுடன் தொடர்ந்தும் "தொங்கிக்கொண்டிருப்பதாக" இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பொதுச்சபையினதும் நிர்வாகசபையினதும் தீர்மானங்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மூதவை உறுப்பினரும் உதாசீனம் செய்வதையிட்டும் வேறு வழிகளைக் கையாளுவதையிட்டும் கட்சிக் கிளை வருத்தம் தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சிக் கிளைகள் விழிப்பாகவிருந்து சூழ்நிலையைக் கவனித்து தமிழரசுக்கட்சியின் நோக்கங்களை அடைவதற்கு வேண்டியநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றதீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

## சிரமதானமுறையில் விநாயகர் ஆலயம்

கொல்லாந்தை, சனி

கொல்லாந்தை மாநகரில் புதிய விநாயகர் பெருமான் ஆலயம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

நகரமக்களால் சிரமதான முறையில் கட்டப்பட்டு வரும் இக் கோயிலுக்கு சிங்கள மக்களும் பொருளுதவியும், ஆதரவும் தந்துதவுகிருர்கள். பாடசாலை மாணவர்கள் சிரமதான முறையில் பல வழிகளிலும் பல வேலைகளைச் செய்துவருகிருர்கள்.

## தமிழரசு கட்சி நாளை கூடுகிறது

### போதனுமொழி, சிங்கள ஆசிரியர் நியமனம் பற்றி ஆராயும்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க பாராளுமன்ற குழுக்கூட்டம் நாளை சனிக்கிழமை கூடுவதற்கு முன்னர் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் போதனு மொழிபற்றியும் சிங்கள ஆசிரியர்கள் சம்பந்தமான பிரச்னைகள்பற்றியும் ஆராய்வர்களெனத் தெரிய வருகிறது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் கொழும்பிலிருந்தும் கலந்து கொள்ளாதிருந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட்டத்தில் கலந்துகொள்ளாது பகிஷ்கரிப்பு செய்ததற்கான காரணத்தையும் இதன் காரணமாக ஏன் ஒழுங்கு நடவடிக்கைகள் இவர்கள் மீது மேற்கொள்ளக்கூடாதென்பதற்குமான விளக்கத்தையும் தமிழரசுக்கட்சித் தலைவர் நாளை நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கோருவார் எனத் தெரியவருகிறது.

கல்வி வெள்ளை அறிக்கை சம்பந்தமாக பிரதமரை சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு முன்னர் திருவாளர்கள். எம். திருச்செல்வமும், எஸ். ஜே. வி. செல்வநாயகமும் நியமிக்கப்பட்டிருந்தனர். நாளை நடைபெறவிருக்கும் கூட்டத்தில் பிரதமரை சந்திக்கவிருக்கும் குழுவை விஸ்தரிக்க வேண்டுமென்றும், பிரதமரை எப்பொழுது சந்திக்க வேண்டும் மென்றும் தீர்மானிக்கப்படுமென நம்பப்படுகிறது.

## மழையினுல் விவசாயிகள் பாதிப்பு

பரந்தன், வியாழன்

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பெருமழை காரணமாக இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

காலபோகம் விதைத்த விவசாயிகளின் வயல்களின் பயிர்கள் வெள்ளத்தினுல் பெருமளவு சேதமடைந்துள்ளது.

ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபனத்தாரின் வேலைகளும் இந்தமழைகாரணமாகபெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இம்முறை இங்கு மிகக் குறைந்த அளவு உப்பே அறுவடை செய்யப்படலாமென நம்பப்படுகிறது.

## "பாகுபாடின்றி உழைத்தவர்"

### மாற்றலாகிச் செல்லும் அதிபருக்கு பாராட்டு

வவனியா, வியா.

இலங்கையில் இன்று உருவாகிவரும் வேலையில்லாப் பிரச்னை நாட்டின் அபிவிருத்தி முன்னேற்றம் ஆகியவற்றிற்கு சாதி, மதம் பாகுபாடின்றி உழைத்தவர் திரு, பி. தசநாயக்கா என்பதில் சந்தேகம் இல்லை.

வவனியா வாடி வீட்டில் குருநாகலுக்கு மாற்றலாகிச் செலும் வவனியா அரசாங்க அதிபர் திரு. தசநாயக்காவுக்கு நடைபெற்ற சேவை நலம்பாராட்டுவிழாவில் வவனியா கச்சேரி காரியாலய உதவியாளர் திரு. ஆர். பேரம்பலம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வைபவம் வவனியா புதிய அரசாங்க அதிபர் திரு பெரேரா தலைமையில் நடைபெற்றது. இவ்விழா அரசாங்க உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டது'

வவனியா சமூக சேவை உத்தியோகத்தர் திரு எஸ் விஜயரத்தினம் பேசும் போது கூறியதாவது:.

நாட்டில் எந்த அரசியல் கட்சியின் சார்பிலும் இல்லாமல் சமநிகர் சமானமாகவும் மக்களின் வாழ்வே தனது வாழ்வு என்றும் நாட்டில் துவேஷத்துக்கு இடம்கொடுக்காமலும் யாவராலும் போற்றப்படுபவராக திகழ்ந்தார்,

திருவாளர்கள் என். பூரணலிங்கம், எம் நடராசா ரி. எஸ்: யோசேப் எஸ். இராசநாயகம் ஆகியோர் உட்பட பலர் பேசினர்.

தமக்களித்த சேவை நலம் பாராட்டுக்கு திரு. ஆர். எம். பி. பி. தசநாயக்க நன்றி தெரிவித்துப் பேசினர்.

## பிள்ளைகளைப் பாதுகாக்க சட்டம் வேண்டும்!

### தேசிய அரசாங்கத்துக்கு நகரசபைத் தலைவர் கோரிக்கை

வவனியா. வியாழன்

'இன்றைய சிறுவர்கள் தான் நாட்டின் வருங்கால முத்துக்கள் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருசிறுவன் நாளை இந்நாட்டின் பிரதமராகவும் வரக்கூடும்'

வவனியாவில் நடைபெற்ற சிறுவர் விழாவில் வவனியா நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையா பேசுகையில்மேற்கண்டவாறு சொன்னர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!-

"குழந்தைகள் உள்ளம் தூய்மையானது. அப்படிப்பட்ட உள்ளங்களை நம்மில் சிலர் அறியாமல் அவர்களை வீட்டுவேலை, கடையியாபாரம் ஆயாவேலை போன்றவைகளில் வேலை வாங்கி அவர்களின் உள்ளத்தை புண்படுத்துகின்றனர். அப்படிச்செய்வதை தடைசெய்வதற்கு நமது தேசிய அரசாங்கம் சட்டம்கொண்டு வந்து பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டும். பிள்ளைகளுக்குள் பெரியவரின்பிள்ளை கூலி ஆளின் பிள்ளை என்ற பாகுபாடு இன்றி எல்லோரும் சமத்துவத்துடன்நடத்தப்படவேண்டிய நிலைமை உருவாக வேண்டும்.

---

மாவிட்டபுரம், வியாழன்

சுழிபுரம்கிராமசபையைச் சேர்ந்த பொன்னாலைமேற்கு கிராமத்தில் சிறுபான்மைத் தமிழர்களுக்கு விநியோகிக்கப்படும் தண்ணீர் விநியோகபைப்புக்கள் உடைத்து நாசமாக்கப்பட்டு உள்ளதாக அரசாங்க அதிபருக்கு சிறுபான்மைத் தமிழர் மகாசபை புகார் செய்துள்ளது.

அரசாங்க அதிபர் சமூக சேவைப்பகுதி மூலம் சிறுபான்மைத் தமிழர் குடும்பங்களுக்கு தண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை எடுத்து உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

வீடும் காணியும்

செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் - 2 1/2 பரப்புநிலமும்முடிவு பெருத வீடும் 43, செட்டித்தெரு வுக்கு அல்லது 16. பென்னி குவிக் பாதை, வெள்ள வத்தைக்கு விண்ணப்பம் செய்யவும். 1404


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
மாலாசிங் நடித்த
அண்க் மிச்சோலி
(ஹிந்தி)

REGAL—JAFFNA
NOW SHOWING
NIGEL PATRICK
MARGARET WHITING
In
The Rank Organisation's
THE INFORMERS

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
அன்பு எங்கே?

மகாத்மா தியேட்டர்
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
திருவிளையாடல்


## கூப்பன் யாருடையது?

சுழிபுரம், வியாழன்

பி. 811415 இலக்கத்தை யுடைய அரிசிக் கூப்பன் ஒன்று சுழிபுரம் தபாலகந் தோர் ஊழியர்களால் கண் டெடுக்கப்பட்டு, சுழிபுரம் தபால்கந்தோர் அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள்தபாற்கந்தோர் அதிபருடன் தொடர்பு கொள்ளவும். இக்கூப்பன் சுழிபுரத்தைச் சேர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக் கது.

## 'இளைஞர் முன்வரவேண்டும்'

உடுவில், வியாழன்

''நாட்டின் பொருளாதார முன்னேற்றம் நம்நாட்டு இளைஞரில் தங்கியுள்ளது குறிப்பாக எங்கள் கிராமங் களில் நெல்வயல்கள் தரவை யாய் இருக்கின்றன. இத்த கைய நிலங்களை கிராமத்து விவசாய இயக்கங்கள் எடுத்துவிளைநிலங்களாக்கின் நாட்டின்நெல்விளைச்சல் கூடு தலுடன் இளைஞரும் தமது ஒய்வு நேரங்களை ஆக்கவேலை களில் கழிக்கலாம்' என்று மானிப்பாய் இளம் விவசாயி கள் கூட்டத்தில் பேசும் பொழுது இளைஞர் தலவுரி மைச்சங்கத் தலைவர் திரு. எம். ஜெயரத்தினம் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

## வலைகள் களவு

கோண்டாவில், வியாழன்

கோரதீவில் மீன்பிடி வலை கள் திருட்டுப்போகின்றன. மீனவர்கள் பகலில் மீன் பிடித்த வலைகளை இரவில் கடற்கரையில் காயவிடும் பொழுதே திருடர்கள் தம் வரிசையைக் காட்டிவிடுவ தாக அறியப்படுகின்றது. அண்மையில் விலையுயர்ந்த நைலோன்வலைகள் திருட்டுப் போயின.


2வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொட்டாஞ்சேனை)
விஜிதா விஜயா ஸ்ரீ கிருஷ்ணா
(ஹட்டன்) (மட்டக்களப்பு) (திருமலை)
மொடேர்ண் வெலிங்டன்
(பண்டாரவளை) (சாவகச்சேரி)
தீபாவளி கல்யாணி
(நுவரெலியா) (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்


## வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கம் பரீட்சைச் சபை அறிவித்தல்

எங்கள் சங்கம் 25-11-66, 26-11-66 ஆகிய தேதிகளில் 3 ஆம், 4 ஆம், 6 ஆம், 7-ஆம் வகுப்புப் பரீட்சை களை நடாத்த ஒழுங்குகள் நடைபெறுகின்றன. இப் பரீட்சையிற் பங்குபற்ற விரும்புவோர் பரீட்சைப் பொறுப்பாளருடன் விரை வில் தொடர்பு கொள்ளும் படி வேண்டப்படுகின்ற னர்.

செ. சிவசுப்பிரமணியம்
பரீட்சைப்பொறுப்பாளர்
சைவப்பிரகாச
வித்தியாசாலை,
தெல்லிப்பழை இழக்கு,
தெல்லிப்பழை.
5-10-66 1310



## கொழும்பு

### வெள்ளி 7 - 10 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை. 7-15துதிப்பாடல்கள், 7-45 பண்ணின் தமிழ்—முத்து லட்சுமி குழந்தைவேல். 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10கிராமச்செய்தி கள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 மூத்திநெறி—சைவ சஞ்சிகை, 7-15 பாட்டு—விக்னேஸ்வரி கைலேஸ்வரம் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 தேர்ந்தஇசை 10-00 நேயர் விருப்பம்.

## கிராம பாதுகாப்பு தொண்டர் படை

அளவெட்டி, வியாழன்

அளவெட்டி கிராம இராப் பாதுகாப்புத் தொண்டர் படையினரின் கூட்டமொ ன்று அளவெட்டி மகாசன சபை மண்டபத்தில் நடை பெற்றது. கூட்டத்துக்கு தொண்டர் படைத் தலைவர் திரு. மு. தில்லைநடராசா தலைமைவகித்தார். சுன்னா கம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் பிர சேனுவும். அளவெட்டி கிராமசேவகர் திரு. சச்சி தானந்தனும் கூட்டத்துக் குச் சமூகமளித்திருந்தனர், கிராமத்தில் திருட்டுக் குற் றங்களைத் தவிர்ப்பதற்காக இராப் பாதுகாப்பைத் தீவி ரப்படுத்தவும் புதிய தொண் டர்களை ஊரெங்கும் நியமிக் கவும் தீர்மானிக்கப்பட்டது.

## கி. ச. அனுதாபம்

வேலணை, வெள்ளி.

வேலணை கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

வேலணையைத் தாயகமா கக் கொண்ட திரு. கா. வேந்தனார் மரணம் குறித்து இச்சபை ஆழ்ந்த அனுதா பம் தெரிவிக்கின்றது. என் றும் இப்பெரியாரின் மறைவு வேலணைக் கிராமத் திற்கு மட்டுமல்லாமல் மற் றும் ஏனைய கிராமங்களுக் கும் ஓர் பெரிய நஷ்டம் என்றும் [illegible] சபையில் நடந்த மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

## தொழிற் பிணக்கு ஆணைக்குழு

இணக்கம், மத்தியஸ்தம், சமரசம் ஆகியன மூலம் தொழிற்பிணக்குகளைத் தீர்க்கும் - நடைமுறை, அனுட் டானம் ஆகியனபற்றி விசாரணை செய்தற்கென மேன்மைதங்கிய மகாதேசாதிபதியவர்களால் நியமிக் கப்பட்டுள்ள ஆணைக்குழு சாட்சியம் சமர்ப்பிக்கு மாறு கோரி, பொது அழைப்பொன்றை வெளியிடத் தீர்மானித்திருக்கிறது.

2 ஆணைக்குழுவின் விசாரணை அலுவல் நியதிகள் பின்வருமாறு:

1. இணக்கம் மத்தியஸ்தம் சமரசம் ஆகியனமூலம் தொழிற் பிணக்குகளைத் தீர்க்கும் நடைமுறை, அனுட்டானம் ஆகியனபற்றி விசாரணை செய்து, அத்தகைய பிணக்குகளைத் தீர்ப்பதில் மேலான திறமையும் துரிதமும் ஏற்படச் செய்தற்குவேண் டிய முறைகளைச் சிபார்சு செய்தல்.
2. தொழில் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் நடை முறை, அனுட்டானம், நிருவாகம் ஆகியனபற்றி விசாரணை செய்து அந்நீதி மன்றங்களிடமும் விசா ரணை மன்றங்களிடமும் சமர்ப்பிக்கப்படும் தொழிற் பிணக்குகளைத் தீர்ப்பதில் மேலான திற மையும் துரிதமும் ஏற்படச் செய்யும்வண்ணம் சட்டம், அனுட்டானம் அந்நீதிமன்றங்களினதும், விசாரணைமன்றங்களினதும் நிருவாகம் ஆகியன பற்றிய விடயங்களில் வேண்டிய சீர்திருத்தங் களைச் சிபார்சு செய்தல்.
3. பின்னர் திருத்தியமைக்கப்பட்டவாறுள்ள (131-ம் அத்தியாயமாகிய) தொழிற்பிணக்குச் சட்டத் தைப் பரிசிலனை செய்து-
   (அ) இலங்கையின் பொருளாதார, சமூக முன் னேற்றத்தையும் இதமானதும் இசைவான துமாகிய தொழில் உறவைப் பேணும் அவ சியத்தையும் கருத்திற் கொண்டு, தொழிற் பிணக்குகளைத் திறமையாகவும், துரிதமாக வும் தீர்த்தலை உறுதி செய்தற்கு அச்சட்டத் தின் ஏற்பாடுகள் போதியனவாவெனவும்,
   (ஆ) இல்லையாயின், மேற்கூறிய சட்டம் ஏற்ற வாறு திருத்தியமைக்கப்பட வேண்டுமோ அல்லது அதற்குப் பதிலாகப் புதியதொழிற் பிணக்குச் சட்டமொன்று இயற்றப்பட வேண்டுமா எனவும்,
   அறிக்கையிடுதல்,
4. பின்வரும் விடயங்களுக்கு விசேட கவனம் செலு த்தி, வேண்டுமாயின் புதிய தொழிற் பிணக்குச் சட்டமொன்றின் நகலை அல்லது அதற்கு மாற் றாக, இப்போதைய தொழிற் பிணக்குச் சட்டத் திற்குத் தேவையான திருத்தங்களின் நகலொன் றைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்:-
   (அ) தொழிற் பிணக்குப்பற்றிய விடயங்களில், தொழில் அமைச்சர், தொழில் அமைச்சின் நிரந்தரச் செயலாளர், தொழில் அதிபர், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் கள், மத்தியஸ்தர்கள் ஆகியோரினதும், தொழில் விசாரணை மன்றங்கள், தொழில் நீதிமன்றங்கள் ஆகியனவற்றினதும் அதிகா ரங்களும் கடமைகளும்.
   (ஆ) தொழிற்பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டிய ஆட் களின் நியமனங்களும் தகுதிகளும்.
   (இ) மத்தியஸ்தரின் தீர்ப்புக்களை நடைமுறையில் கொண்டுவருதல்.
   (ஈ) நேர்மையற்ற தொழில் அனுட்டானங்களும் பரிகாரங்களும்.
5. மேற்கூறிய விடயங்கள் பற்றியும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றிலிருந்து எழுகின் றனவும் முறைப்பாடு பெறப்பட்டனவுமான மற் றும் எவ்விடயம்பற்றியும் ஆணைக்குழுவினது விசா ரணையின் பயனாக வேண்டியனவெனக் கருதப் படும் சிபாரிசுகளை, குறிப்பாக வேலைக்கமர்த்துப வர் - ஊழியரிடையே உறவைச் சீர்திருத்துதற்குக் கையாளப்பட வேண்டிய முறைகள் பற்றி, செய்தல்.

3. மேற்கூறிய விசாரணை அலுவல் நியதிக ளுள் ஒன்றுபற்றி அல்லது அவை யாவும்பற்றிச் சாட் சியம் சமர்ப்பிக்க விரும்பும் ஒருவர் அல்லது குழுவி னர் எழுத்தில் விஞ்ஞாபனமொன்றிற் கூறி, ஆணைக் குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி இத் தாற் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. அத்தகைய சாட்சியம் சமர்ப்பிக்க விரும்பு வோருக்கு உதவிபுரியும்வண்ணம் வினாத் தொட ரொன்றை ஆணைக்குழு தயாரித்துள்ளது. இதைப் பெற விரும்புவோர் செயலாளருக்கு விண்ணப் பித்துப் பெற்றுக் கொள்ளலாம். பிரதானமாக, வினாத் தொடரிற் கேட்கப்படுவனவற்றிற்கு அமைய சாட் சியம் சமர்ப்பிக்கப்படின் உதவியாயிருக்கும். கூடுத லான சாட்சியமெதையும் தனிவிஞ்ஞாபனமாக அனுப்பலாம்,

5. கேட்கப்படும் எழுத்துமூலமான சாட்சியத்தி லுள்ள யாதாயினும் விடயத்தைத் தெளிவுபடுத்தும் பொருட்டன்றி, வாய்மூல சாட்சியம் பெறுவதற்கு எவரையேனும் ஆணைக்குழு இப்பொழுது அழைக்க உத்தேசமில்லை.

6. தனக்குக் கிடைத்த சாட்சியமெதையும் பிரசு ரிக்குமுரிமை ஆணைக்குழுவிற்கு உண்டு. ஆயினும் அத் தகைய சாட்சியம் முழுவதையும் அல்லது அதன் பகுதியொன்றை அந்தரங்கமானதாகக் கருதுமாறு செய்யப்படும் வேண்டுகோளெதையும் சீர்தூக்கிப் பார்க்க ஆணைக்குழு தயாராகவிருக்கும்.

7. வினாத்தொடர்கள் கோரி எழுத்துமூலம் செய் யப்படும் விண்ணப்பங்கள், எந்த மொழியில் தேவை யெனக் குறிப்பிட்டு 14-10-66-ந் தேதியன்று அல்லது அதற்கு முன்பு பின்வருமாறு செயலாளருக்கு விலாச மிட்டு அனுப்பவேண்டும்.

செயலாளர், தொழிற்பிணக்கு ஆணைக்குழு, இல. 6, பெஜட்ரோட், கொழும்பு 5.

8. வினாத்தொடர்களின் தகவல் பிரதிகளையும் மேற்கூறிய விலாசத்திலுள்ள ஆணைக்குழுவிற்கு விண் ணப்பம் செய்து, பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். எஸ். வனசுந்தர,
5-10-66. செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்னாம் நெருக்கடி

# படைவிலக்கப் பகுதியில் அமெரிக்க குண்டு வீச்சு நிறுத்தம்

## பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகாண யூதாண்ட் புதிய முயற்சி

வாஷிங்டன், அக்டோபர் 1

**வியட்னாம் படைவிலக்க பிராந்தியத்தின் கிழக்குப் பகுதியில் அமெரிக்கா குண்டு வீச்சை நிறுத்தியுள்ளது.**

வடக்கு வியட்னாமுக்கும் தென் வியட்னாமுக்குமிடையிலான இந்த ராணுவ விலக்கு பிராந்தியத்தில் கடந்த ஒன்றரை வருடங்களாக அமெரிக்க விமானங்கள் குண்டு வீச்சு நடத்திவந்தன. அமெரிக்காவின் சமாதான நடவடிக்கையின் ஒரு பகுதியாக விமானத் தாக்குதல்கள் இப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக வாஷிங்டனில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்க் நேற்று நிருபர்களிடம் தெரிவிக்கையில் போர் பரவுவதைத் தடுக்கும் ஒரு முன்நடவடிக்கையாகவே வடக்கு, தெற்கு வியட்னாமின் எல்லையொன்றில் குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்தியுள்ளது என்று கூறினார்.

### கனடா பிரதமர் வரவேற்பு

அமெரிக்காவின் புதிய நடவடிக்கையை கனடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் வரவேற்றுள்ளார்.

போர் நிறுத்தப் பிராந்தியத்தில் குண்டுவீச்சை நிறுத்தவேண்டுமென்பது கனடாவின் முழு விருப்பமென்றும் வியட்னாம் போர்நிறுத்த கட்டுப்பாட்டு கமிஷனில் கனடாவும் அங்கம் வகிப்பதால் அமெரிக்காவின் புதிய நடவடிக்கை தமக்கு உற்சாகமளிக்கிறதென்றும் திரு. லெஸ்டர் பியர்ஸன் தெரிவித்துள்ளார்.

### பிரமாண்டமான பீரங்கிகள் வியட்னாம் விரைகின்றன

இதற்கிடையே அணுசக்திக் கருவிகளையும் ஆயுதங்களையும் மற்றும் சாதாரண குண்டுகளையும் சுட்டுத்தள்ளும் பிரமாண்டமான பீரங்கிகளை அமெரிக்கா தென்வியட்னாமுக்கு அனுப்பிவைத்துள்ளதாக சைகோனிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### யூதாண்ட் புதிய முயற்சி

வியட்னாம் நெருக்கடியை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துவைப்பதில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யூதாண்ட் புதியமுயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

யூதாண்டின் புதிய முயற்சிகள் நெருக்கடியைத் தணிப்பதில் உதவிசெய்யலாமென்று இங்கு கருதப்படுகிறது.

## 14-ம் நூற்றாண்டு கண்ணாடிப்பாத்திரம்

மொன்ட்றீல், அக். 4

அடுத்தவருடம் மொன்ட்றீலில் நடைபெறும் உலக கண்காட்சியில் பார்வைக்கு வைப்பதற்காக செக். திரட்டியுள்ள நவீன கண்ணாடிப் பாத்திரங்களை பிருக் நகர நிருபர்கள் பார்வையிட்டனர்.

பொஹிமியாவின் நவீன படைப்புகளின் 250 தொடக்கம் 300 கண்ணாடிப் பாத்திரங்களும் பொஹிமியாவின் பழைய படைப்புகளான (14-ம் நூற்றாண்டில் உற்பத்தி செய்யப்பட்டவை) சுமார் 60 கண்ணாடிப்பாத்திரங்கள் செக்கோஸ்லோவாக்கிய கண்காட்சியில் வைக்கப்படும்.

---

## பெண்கள் போட்டிகள்

பெர்லின், அக். 4

முதற்தடவையாக மேற்கு பெர்லினில் சர்வதேச பெண்கள் சயிக்கிள் ஓட்டப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியை 5000க்கும் அதிகமானவர்கள் பார்வையிட்டனர்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள மூன்று கழகங்கள் பெண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டிகளை நடத்திவருகிறது. இப்போட்டிகளை பெண்களே நடத்திவருகின்றனர்.

---

## 'ரொடீஷியா ஆட்சி கவிழ்துவிடும்'

லண்டன், அக். 4

பொருளாதார தடைகள் மூலம் சட்ட விரோதமான ரொடீஷியா ஆட்சியை கவிழ்த்துவிடலாமென பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திரு. ஆதர்வொட்டம்லி வலியுறுத்தினார்.

கனடாவின் தலைநகரமான ஒட்டாவாவில் நடைபெறும் சாம்ராஜ்யபாராளுமன்ற மாநாட்டில் உரை நிகழ்த்திய அவர் பலாத்கார பிரயோகம் மூலம் சிமித் ஆட்சியை கவிழ்ப்பதென்பது பெரும்ராணுவ நடவடிக்கையாக அமையுமென எடுத்துரைத்தார்.

பலாத்கார பிரயோகத்தால் கிழக்குமத்திய ஆபிரிக்காவில் மற்றுமொரு வியட்னாம் போன்ற நெருக்கடி நிலைமையை உருவாக்கலாமென அவர் எச்சரித்தார். இவ்வித ஒருயுத்த நெருக்கடி ஆபிரிக்கக் கண்டத்தின் முழுவதால் செழிப்பான பிரதேசங்கள் நாசமாகி விடலாமென்றும் அவர் கூறினார்.

---

## இராணுவ உதவி குறைப்பு

வாஷிங்டன், அக். 6

அமெரிக்கா தனது இராணுவ உதவித்திட்டத்துக்கு கீழான வெளிநாட்டு உதவி [illegible] குறைத்துள்ளது.

## "கடமையைச் செய்ய தென் ஆபிரிக்கா தவறிவிட்டது"

### ஐ.நா.வில் ஜீ.ஜீ.முழக்கம்

ஐ. நா. (நியூயோர்க்) அக் 6

''தென்னாபிரிக்கா தனது கடமையைச்செய்யத் தவறிவிட்டது; தனது பொறுப்பையும் உணர்ந்து சரிவரச் செய்யவும் அது மறந்துவிட்டது'' என்று யாழ்ப்பாண எம். பி.யும், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு ஆபிரிக்காவின் நிர்வாகத்தை ஐ நா. மகாசபை பொறுப்பேற்க வேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் மகாசபையில சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின்மீது இலங்கைப் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர் திரு. ஜி. ஜி. பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

மனித வர்க்கத்தில் ஒருவனாக நான் பிறந்தவன் என்பதனால் ஒரு மனிதன் இயற்கைக்கு மாறாக இறந்துபோனவரை எண்ணும்போது ஏற்றுக்கொள்ளமுடியாமல் இருக்கிறது. எந்த ஒரு மனிதனும் உலகில் தனித்துவாழமுடியாது. ஒவ்வொரு மனிதனும் மனித சமுதாயத்தின் ஓர் அங்கம்.

தென்னாபிரிக்க அரசாங்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஓர் அங்கமென்ற முறையில் வார்ஸா உடன்படிக்கையில் கையெழுத்திட்டு அப்பொறுப்பை ஏற்றது. வார்ஸாஉடன்படிக்கை சர்வதேச சங்கத்தின் ஆதரவில் தாயரிக்கப்பட்டதென்றும், அந்தச் சங்கம் கலைக்கப்பட்டபடியால் அந்த உடன்படிக்கை சம்பந்தமான தனது பொறுப்புகள் இல்லாமற் போய்விட்டன என்றும் தென்னாபிரிக்க அரசாங்கம் வாதுசெய்வது பொருத்தமற்றது. சர்வதேச நீதிமன்ற நீதிபதிகளே இக்கருத்தை ஏற்றுள்ளனர். சர்வதேச சங்கத்தின் பொறுப்புகளை எல்லாம் ஏற்றுக்கொள்ள ஐக்கிய நாடுகள் சபைக்குத் தென்மேற்கு ஆபிரிக்கா மீதுள்ள பொறுப்பு நீங்கிவிடவில்லை என்பது தெளிவு. தென்னாபிரிக்க அரசாங்கம் தனது கடமையைத் தட்டிக்கழிக்காது, ஐ. நா. சபையுடன் ஒத்துழைத்து ஆவனசெய்ய முன்வருமாறு அதன் பிரதிநிதியைக் கேட்டுக்கொள்கிறேன்.

## ரஷ்யப் பிரதமரின் இந்திய விஜயம்

மாஸ்கோ, ஒக் 5

ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கோஸிஜின் அடுத்தமாதம் இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்.

கடந்த ஜூலை மாதத்தில் ரஷ்யாவுக்கு இந்தியப்பிரதமர் விஜயம் செய்ததற்குப் பதில் மரியாதை தெரிவிக்கும் வகையில் திரு கோஸிஜின் இந்தியா செல்ல விருக்கிறார். இவர் அங்கு ஒரு வாரகாலம் வரை தங்கியிருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடைசியாக திரு. கோஸிஜின், காலம்சென்ற இந்தியப்பிரதமர்கள் நேருஜி, லால்பகதூர் சாஸ்திரி ஆகியோரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள இந்தியா சென்றிருந்தார்.

## 'எத்தனை கட்சிகள் சேர்ந்தாலும் காங்கிரஸை அசைக்கமுடியாது'

### காங்கிரஸ் மகாநாட்டில் காமராஜர்

காரைக்குடி, ஒக். 5

எத்தனை கட்சிகள் கூட்டு சேர்ந்தாலும், உண்ணாவிரதமிருந்தாலும், சத்தியாக்கிரகம்செய்தாலும் காங்கிரஸைத் தோற்கடிக்க முடியாது. தேர்தலில் காங்கிரஸ்தான் வெற்றிபெறும். எங்கள் பலத்தை எவராலும் குறைக்க முடியாது.

காரைக்குடியில் நடைபெற்றகாங்கிரஸ் மகாநாட்டில், திரு. காமராஜர்பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; தமிழ் நாட்டில் எதிர்க்கட்சிகள் கடையடைப்பு நடாத்தி பெரும் குழப்பத்தை உண்டுபண்ணிவருகின்றார்கள். இதில் பொது மக்கள் கவனமாக இருக்க வேண்டும். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகள் தேவை. ஆனால் குழப்பம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடலாமா?

சிலர் கடைமூடினால் சிலர் கடைகளை திறந்துவைப்பார்கள். திறக்கப்பட்டிருக்கும் கடைகளுக்கு சிலர் கற்களை வீசுவார்கள், இதனால் பெரும் குழப்பம் ஏற்படும். இப்படி செய்வது நாட்டிற்கு கெடுதிதானே?

எப்படியோ ஹிந்திஎதிர்ப்பு கலவரம் மூண்டது. இதனால் எவ்வளவு நஷ்டம். எத்தனை பேர் பலியானார்கள். இதையெல்லாம் நினைக்காமல் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்க நினைப்பதா? தைரியமாகக் கடைகளைத் திறந்து வையுங்கள். பொலிஸார் தகுந்தபாதுகாப்பு கொடுப்பார்கள்,

---

## இந்திய—நேபாள உறவுகள்

காட்மாண்டு, அக். 6

நேபாளத்திற்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று நேபாள மன்னர் மகேந்திராவுடன் இருநாட்டு உறவுகள் குறித்தும் சர்வதேச விவகாரங்கள் பற்றியும் பேச்சுக்கள் நடத்தினார்.

---

## சீன எச்சரிக்கை

பீகிங், அக். 4

இந்தோனேஷியாவில் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நிறுத்துவதில் அரசாங்கம் தவறுமானால் விளைவுகள் அனைத்துக்கும் இந்தோனேஷியாவே பொறுப்பேற்க வேண்டும் என்று சீன அறிவித்துள்ளது.

இதற்கிடையே நேற்று ஜாகர்த்தாவில் சீனத் தூதரகம்முன் இந்தோனேஷிய மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தினர்.

## ஜாக்ரூபி வழக்கு

### டெக்ஸாஸ் நீதிமன்றம் தள்ளுபடி

டெக்ஸாஸ், அக் 5

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ். கென்னடியைச் சுட்டுக் கொலை செய்த லீ ஹார்வி ஒஸ்வோல்டைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த ஜாக்ரூபியை விசாரணை செய்த டெக்ஸாஸ் நீதிமன்றம், வழக்கைத் தள்ளுபடி செய்து மறுவிசாரணை ஒன்றை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

ஜாக்ரூபி அளித்த வாக்குமூலங்களைப் பொலிஸார் பதிவு செய்ததில் முரண்பாடுகள் காணப்படுகிறதென்று தெரிவித்த நீதிபதிகள், முன்னர் விசாரணை செய்த டல்லஸ் நீதிமன்றம் தவிர்ந்த வேறு நீதிமன்றம் ஜாக்ரூபிமீதான வழக்கை மீண்டும் விசாரணை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளனர்.

கொலைக் குற்றங்களுக்கான அப்பீல்களை விசாரணை செய்யும் டெக்ஸாஸ் நீதிமன்றமே ஜாக்ரூபிமீதான வழக்கை இப்பொழுது தள்ளுபடி செய்திருக்கிறது.

---

## வாழ்க்கை வசதிகள்

பிரேக், ஒக்டோபர் 6

செக்கோஸ்லோவாக்கியாவில் இன்று 1300 பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளியிடப்படுகின்றன. அந்நாட்டில் 60 லட்சத்திற்கு மேற்பட்ட வானொலிப்பெட்டிகளும் டெலிவிஷன்பெட்டிகளும் உள்ளன. தேசிய பத்திரிகைகள் வாசகர்களிடமிருந்து வருடாவருடம் ஏறக்குறைய 1,50,000 கடிதங்களைப் பெறுகின்றன. வானொலிச்சேவை செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்து 6 லட்சம் கடிதங்களையும் வெளிநாடுகளிலிருந்து 100,000 கடிதங்களையும் பெறுகின்றது.

---

## ராஜீய உறவு துண்டிப்பு

லண்டன். அக். 6

போர்ச்சுக்கலுடனான ராஜீய உறவுகளை காங்கோ துண்டித்துக்கொண்டது.

தனது காலனி நாடான அங்கோலாவை காங்கோவுக்கெதிரான தளமாகப் போர்ச்சுகல் பயன்படுத்துவதாக காங்கோ குற்றம் சாட்டியுள்ளது.

## நினைவு மன்றம்

பிரேக், அக்டோபர் 6

''லிடிஸ்சே வாழவேண்டும்'' என்ற இயக்கத்தை 24 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்துவைத்த சேர் பார்னட் ஸ்ரோஸ், லிடிஸ்சே கிராமத்திற்கெதிரான நாக்ஸிய கொலைக்கும்பல் செய்த கொடூரத்தை எடுத்துரைக்கும் 25 வது ஆண்டை நினைவுறுத்தும் கலாமன்றமொன்றை லிடிஸ்சேயில் திறந்து வைக்கத் திட்டமிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எதிர்காலத்தைப் பற்றியோ கடந்த காலத்தைப் பற்றியோ எண்ணிக்கொண்டிருக்காதீர். இப்பொழுது என்ன நடைபெறவேண்டுமென்பதிலேயே கவனம் செலுத்துங்கள். இதனால் கவலை அறவே நீங்கிவிடுகிறது. நீண்டகாலம் வாழவும் முடியும். —சுவாமி சிவானந்தா

ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box 49 Jaffna.
Telegrams: EELANADU Jaffna Telephone 189

யாழ்ப்பாணம் ... புரட்டாதி 21 (7-10 66

# வெள்ள அபாயம்

இலங்கையில் சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்து ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் மற்றும் இடங்களிலும் வாழும் மக்களுக்குப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. பலர் வீடுகளையும், உடைமைகளையும் இழந்துள்ளனர், உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. இது போன்ற சேதங்கள் வருடா வருடம் அடிக்கடி ஏற்படும் போலத் தெரிகின்றது.

இந்தியாவின் சில பகுதிகளிலும் இதுபோன்ற சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

வெள்ளப் பெருக்கு அபாயம் பூமி நடுக்கத்தைப் போல தடுக்கமுடியாத ஒன்றல்ல. வெள்ளத்தினால் ஏற்படும் சேதத்தை முன்கூட்டியே தடுப்பதற்கு அரசாங்கம் ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இதில் பிறநாட்டு, உள்ளூர் நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெறலாம். இதைவிட வெள்ளம் வந்தால் பொதுமக்களுக்குநிலைமை பற்றி அறிவித்து அவர்களை அபாயத்திலிருந்து காப்பாற்றுவதற்கு ஏற்ற வசதிகள் அளிப்பதுவும் அரசாங்கத்தின் கடமையாகும்.

இந்த அபாயம் யுத்த காலத்தில் விமானக் குண்டு வீச்சால் வரும் அபாயம் போன்று அவசியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொருவிஷயம். எவ்வளவு விரைவில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சேதத்தைத் தடுத்து நிறுத்தலாம். இவ்விதரித நடவடிக்கை மேற்கொண்டாலன்றி வெள்ளத்தினால் ஏற்படும் அழிவிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்ற முடியாது.

இவ்வித அபாயத்தை உள்ளூராட்சி மன்றங்கள் கவனித்து சமாளிக்கக்கூடிய நிலையிலில்லை. நிதி வசதியும், ஆட்பலமும் அவைகளுக்குப் போதாது என்பது தெளிவான தொன்று.

பெரியதொரு ஆபத்தை விளைவிக்கக்கூடிய இது போன்றதொரு விஷயத்தைக் கமிஷன் ஒன்றை நியமித்து அதனிடம் ஒப்படைப்பது நல்லதொரு தீர்வுக்கு வழி அமைப்பதாக இருக்கும். இந்த வெள்ள நிவாரண கமிஷனுக்கு மத்திய அரசாங்கமும் உள்ளூராட்சி மன்றங்களும் மற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களும் நிதி உதவி மற்றும் உத்தியோகஸ்தர்களின் ஊழிய உதவியும் அளிக்கலாம். இந்தக் கமிஷனுக்கு இராணுவத்தினரின் உதவியும் இடைக்கக் கூடிய வகையும் செய்யப்படவேண்டும். அத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களுக்குடனுக்குடன் உதவக்கூடிய ஒரு ஸ்தாபனமும் நிறுவப்படவேண்டும்.

வெள்ளம் வருவதற்கு முன் அணை போடவேண்டுமென்பது போல் அரசாங்கம் வெள்ளத்தின் அபாயத்தை நன்குணர்ந்து இவ்வித நடவடிக்கை எடுத்தாலன்றி வெள்ளத்தினால் ஏற்படும் அழிவிலிருந்து மக்களையும் அவர்களது உடைமைகளையும் காப்பாற்ற முடியாது.

## யுதாண்டின் புதிய முயற்சி

வியட்நாம் யுத்தத்தைத் தணிப்பதில் இப்பொழுது பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள், உலகில் சமாதானம் நிலைக்கவேண்டுமென்று விரும்புபவர்களுக்கு சிறிது நம்பிக்கை அளிப்பதாகவிருக்கின்றன.

○ ஐக்கியநாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்டின் புதிய முயற்சிகள் ○ அமெரிக்காவின் ஓரளவு குண்டு வீச்சு நிறுத்தம் ○ அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாராவின் தென்வியட்நாம் விஜயம் ○ அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் ரஸ்க்-யுதாண்ட் சந்திப்பு ○ ஏழுநாடுகளின் மணிலா மகாநாடு ஆகியவைகள் வியட்நாம் யுத்தத்தைத் தணித்து வைக்கும் அறிகுறிகளாகத் தென்படுகின்றன.

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட், அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் ரஸ்க்கையும் ஐ. நா.வுக்கான அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பேர்க்கையும் வரவழைத்து வியட்நாம் நெருக்கடி குறித்து பேச்சுக்கள் நடத்தியிருப்பதும் நெருக்கடியைத் தணிப்பதில் யுதாண்ட் முழுமூச்சாக ஈடுபட்டிருப்பதும் வியட்நாம் நெருக்கடியில் ஏற்பட்டிருக்கும் புதிய திருப்பமாகவிருக்கின்றன. வியட்நாம் நெருக்கடியை ராணுவ ரீதியில் தீர்க்க முடியாது என்பதும் பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே இதற்குப் பரிகாரம் காணலாமென்பதும் பொதுவான கருத்து. அப்படியிருக்க இந்த நெருக்கடி இரண்டு வல்லரசு நாடுகளிடையே நடைபெறும் கெடுபிடியுத்தமோ என்றுகூட கருதத் தோன்றுகிறது.

வியட்நாமின் வடை விலக்கப்பகுதியில் இப்பொழுது அமெரிக்கா குண்டு வீச்சை நிறுத்தியிருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கை. இதன் மூலம் வடக்கு வியட்நாமின் மனம் ஓரளவு மாறலாம் என்றுகூட எதிர்பார்க்க இடமுண்டு. இம்மாதம் 28 ம் திகதி மணிலாவில் ஆரம்பமாகும் வியட்நாம் சமாதான மகாநாட்டுக்கு முன்னர் இப்படியான சில நல்ல அறிகுறிகள் தோன்றவும் கூடும்.

வியட்நாம் நெருக்கடியை எவ்வளவு சீக்கிரமாகத் தீர்க்கமுடியுமோ அவ்வளவு விரைவாக இதற்குத் தீர்வைக் காணவேண்டியது சம்பந்தப்பட்ட நாடுகளினது மட்டுமன்றி உலக நாடுகள் அனைத்தினதும்கடமையாகும். சமாதான மேசைக்கு வடக்கு வியட்நாமை இழுப்பதில் சிறிது கஷ்டமேற்பட்ட பொழுதிலும் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் நம்பிக்கையுடன் மேற்கொண்டிருக்கும் புதிய முயற்சிகள் வியட்நாம் யுத்த விறுவிறுப்பைக் குறைத்து உலகில் சமாதானத்தை ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கலாம். இந்த நல்ல முயற்சிக்கு வல்லரசுகளின் ... வும் முக்கியமாகும்.

கருத்தரங்கு

# முதலாளி-தொழிலாளி இருவரது மனப்பான்மையும் மாறவேண்டும்

எமது விசேஷ நிருபர்

["இலங்கையின் தொழிற் சட்டங்களிற் பெரும்பான்மை சட்டம் புத்தகத்தளவிலேயே நின்று விடுகின்றன.

சம்பள நிர்ணயசபையினால் விதிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த ஊதியங்கூடத் தங்கள் தொழிலாளிகளுக்குக் கொடுக்காத முதலாளிகள் எத்தனை பேர்?

இவர்களில் அநேகர் உள்ளனர் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். சட்டத்தைச் செயற்படுத்தாது, இம்முதலாளிகளின் சட்டவிரோத நடவடிக்கைகளை அரசாங்கம் அனுமதிக்கும் வரை இவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகும்."

இலங்கை முதலாளிகள் சம்மேளனத்தின் தலைவர் திரு. மல்லோரி விஜயசிங்க, அண்மையில் நடைபெற்ற சம்மேளனத்தின் 37-வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

இங்கு பிரசுரிக்கப்படும் கட்டுரையிலும் அவரது கருத்துக்களை மனதிற்கொண்டு, அத்துடன் தமது சொந்தக் கருத்துக்களையும் இணைத்து முதலாளி-தொழிலாளி உறவுபற்றிக் கட்டுரையாளர் விமர்சிக்கிறார்.]

தனமும், அக்கறையின்மையும்.

### தொழிற்சங்கங்கள்

சோஷலிசம் என்ற பெயரில் இயங்கும் பல அரசியற் கட்சித் தலைவர்களின் அதிகாரத்துக்குள் அகப்பட்டு, தொழிற்சங்கங்கள் பல தமது சுயாதீனத்தை இழந்து தவிப்பதையும் அண்மைக் காலத்தில் நாம் பார்த்திருக்கிறோம்.

தொழிற்சங்கங்கள் தொழிலாளரைப் பிரதிநிதித்துவம் செய்வதுடன், தொழிலாளர்களையே தலைவர்களாகவும் கொண்டு இயங்க வேண்டியது அவசியம். அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகளில் தொழிலாளர் தலைவர்கள் பெரும்பாலும் தொழிலாளர்களாகவே இருக்கின்றனர்.

### சட்டங்கள்

இந்நாட்டிலுள்ள சட்டங்கள் பெரும்பாலும் முதலாளிக்கே பாதுகாப்பு அளிக்கின்றன. இலங்கை சுதந்திரமடைந்த பின் விசேஷமாக 1956க்குப்பின் இச் சட்டங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் ஒரு முதலாளிக்கெதிராக சட்டரீதியில் ஒரு தொழிலாளி வழக்குத் தொடருவது என்பது நடைமுறையில் சாத்தியமாகாது. போதிய பணபலம்படைத்த முதலாளியுடன் சட்டமன்றங்களில் மோதுவதற்குச் சாதாரண தொழிலாளியால் முடியவே முடியாது.

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கெனத்தான் கைத்தொழில் கோர்ட்டுகள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்

(5-ம் பக்கம் பார்க்க)

இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு முதலாளி—தொழிலாளி உறவு சுமுகமாக அமைவது அவசியம். இதை மனதிற் கொண்டே, கைத்தொழில் தகராறு கமிஷன் ஒன்றும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் தொழிற்துறை சம்பந்தப்பட்ட சகல கருத்துக்களையும் வாசகர்களிடமிருந்து வரவேற்கிறோம். கட்டுரைகளை கருத்தரங்கு, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

தனிப்பட்ட வாழ்க்கையில் கணவன்-மனைவி உறவு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்ததோ, அவ்வளவுதூரம் சமூக வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்தது முதலாளி-தொழிலாளி உறவு என்பதை இன்றைய சூழ்நிலையில் யாரும் மறுக்கமாட்டார்கள்.

மற்றைய நாடுகளிலும் பார்க்க இலங்கையில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையேயுள்ள தொடர்புகள் மிகவும் பின்தங்கியுள்ளன.

### காரணம் என்ன?

இதற்கு அடிப்படைக்காரணமென்ன? இந்நாட்டில் தொழிலாளிகளைச் சரியான முறையில் வழிநடத்தும் தொழிற்சங்கங்கள் இல்லாமையும், முதலாளிகளை ஆதரிக்கும் சட்டங்களும் சட்டமன்றங்களும் அமைந்திருப்பதுமேயாகும். இவற்றைவிட, முக்கிய காரணம் ஒன்றும் உண்டு. அதுதான் அரசாங்கத்தின் பிற்போக்குத்

## நாட்டிலும் நகரிலும்

இலங்கை மக்கள் ஒரு நாளில் 65 லட்சம் சிகரெட்டுகளை புகைத்து ஊதித் தள்ளுகிறார்களென்பது இங்குள்ள ஒரு பிரபலமான சிகரெட் கொம்பனி தனது வருடாந்த அறிக்கையில் கூறுகிறது. ஒரு சிகரெட் 5 சதம் முதல் அதன் தரத்துக்கு ஏற்றபடி 15 சதம் வரை விற்கப்படுகிறது. சராசரி 10 சதம் படி பார்த்தாலும் நாளொன்றுக்கு 6 லட்சத்து 50,000 ரூபா சிகரெட் புகைப்பால் கரி சாம்பராகிறது.

இத்தனையும் போதாதென்று அமெரிக்காதேசத்திலிருந்து ஒரு புது 'பிரூன்ட்' சிகரெட்டுகளையும் இலங்கைக்கு தருவிக்கப்போகிறார்களாமென்று கூறி, இது சம்பந்தமான பத்திரிகை விளம்பரம் ஒன்றையும் என்னிடம் காட்டி, ஒரு நண்பர் தனியாய் தவித்து புழுவாய் பதைக்கிறார். வெளிநாடுகளிலிருந்து மனிதனுக்கு உபயோகமான பழ வகைகள், பட்டர், பாலுணவுகள் முதலியவற்றை தடுத்துவிட்டு சிகரெட்டுக்கு மட்டும் ஏன் இடம் கொடுத்தார்கள் என்று அவர் மனம் புழுங்குகிறார்.

அவர் கூறுவதில் ஒரு சொட்டாவது உண்மை இருக்கத்தான் செய்கிறதென்று எனக்கும் படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து அதன் வரலாற்றிலேயே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரே ஒரு பொருள் யாழ்ப்பாணத்து புகையிலை தான். யாழ்ப்பாண மலையாளப் புகையிலை கொம்பனி இங்கிருந்து இந்தியாவுக்கு புகையிலை ஏற்றுமதி செய்து கொண்டு வந்தது. புகையிலைத் தொழிலாளருக்கு இதனால் கணிசமான வருவாய் கிடைத்து வந்தது. இப்பொழுது சில காலமாக இந்த ஏற்றுமதியும் நின்று விட்டது. உள்நாட்டு உற்பத்திகளுக்கும் தொழில்களுக்கும் ஊக்கம் அளிக்கப்பட்டு வரும் இக்காலத்தில் வெளிநாட்டு மூலதனத்தால் உற்பத்தியாகும் சிகரெட்டுகளுக்கும் முழுக்க

(5-ம் பக்கம் பார்க்க)

# ஜேர்மன் ஜனநாயக குடியரசு 17-வது தேசிய தினம்

[ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு தினத்தையொட்டி இக்கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது]

இன்று ஜேர்மன் ஜனநாயக குடியரசின் 17-வது தேசிய தினமாகும். 17 வருடங்களுக்குமுன்பு, ஜேர்மன் ஜனநாயகக்குடியரசு அக்டோபர் 7-ம் திகதி அமைக்கப்பட்டது.

ஜேர்மனி உலக யுத்தத்தின் விளைவாகப் பிரிக்கப்பட்டதினால் இங்கு மீண்டும் ஓர் ஐக்கியப்பட்ட பொருளாதார அபிவிருத்தியினை உருவாக்குவது மிகவும் சிரமமாகிவிட்டது.

கிழக்கு ஜேர்மனியில் வாழ்ந்த மக்கள் ஒற்றுமையாக இயங்கியதாலும், சோஷலிஸ நாடுகளின் ஒத்துழைப்பு கிழக்கு ஜேர்மனிக்குக் கிடைத்ததாலும், துரிதமாக இங்கு தேசிய பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டது.

ஜேர்மன் ஜனநாயக்குடியரசின் தேசிய உற்பத்தியில் 70 வீதத்திற்கு மேற்பட்ட வருமானம் கைத்தொழிலினால்தான் கிடைக்கின்றன. மீதி வீதமான வருமானம் விவசாயத்திலும், காடுகளிலும் கிடைக்கின்றது. கைத்தொழில் உற்பத்திகளில் பொறியியல் முதன்மையுடையதாக உள்ளது. அனேக கப்பல் நிர்மாணச் சாலைகள் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசினில் நிர்மாணிக்கப்பட்டிருப்பது வர்த்தகக் கப்பல்களின் தரமும் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களின் தரமும் ஒரே நேரத்தில் அபிவிருத்தி அடைய ஏதுவாகவிருக்கின்றன.

இரசாயனத் தொழில் உற்பத்திகள் ஜேர்மன் ஜனநாயகக்குடியரசின் மொத்தக்கைத்தொழில் உற்பத்தியில் ஆறில் ஒரு பங்காக அமைந்துள்ளது. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் தன்மையினைக் குறிப்பிடுக்கொள்வதாயின், 19,000 மக்கள் நிலக்கரிச் சுரங்க வேலைகளிலும், 280,000 மக்கள் அணிமணிகள் உற்பத்தித் துறையிலும், 200,000 உணவுப் பொருட்களை உற்பத்திசெய்வதில் தொழில் புரிகின்றார்கள்.

சில மாதங்களுக்கு முன்புதான் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசினில் முதல் முதலாக அணுசக்தி நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் விஞ்ஞானம் பற்றிய கருத்தரங்கு, கண்காட்சி

## அடுத்தவருட ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

1968-ம் வருடம் முதல் பல்கலைக்கழகக் கல்வி தாய் மொழியிலே நடைபெறும் என்ற அரசினர் கொள்கையைத் தொடர்ந்து தமிழ் விஞ்ஞானம் பயிற்றுவதில் உள்ள பிரச்னைகள்பற்றி இலங்கையிலுள்ள தமிழ் விஞ்ஞான ஆசிரியர்களும், பிற கல்வித் துறையாளர்களும், எதிர்வரும் தைப் பொங்கல் விடுமுறையை அடுத்து யாழ்ப்பாணத்தில் ஒரு கருத்தரங்கமும், இதுவரை தமிழில் வெளிவந்த பாடநூல் நூல்களின் கண்காட்சி ஒன்றையும் நடாத்த விருக்கின்றனர்.

அறிவொளி விஞ்ஞானத் திங்கள் வெளியீட்டாளர்களான தமிழில் விஞ்ஞானக் கல்வி விருத்திக்கான நிறுவனத்தினர் வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுடன் நடத்திய கூட்டமொன்றில் இவ்விதீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற் கலந்து கொண்ட பிரதம அதிதியான இலங்கைப் பல்கலைக் கழகப் பௌதிகத்துறைப் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், கருத்தரங்கம் ஒன்று நடாத்த வேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்தும்போது, 1968 முதல் பல்கலைக்கழகத்திலும் தமிழிலேயே படிப்புக்கள் யாவும் நடைபெறுமென்றும். அதற்குத் தக்க முறையில் மாணவர்களை ஆயத்தஞ் செய்வது ஆசிரியர்களின் கடமை என்றும் கூறினார்.

இலங்கையிலுள்ள விஞ்ஞான ஆசிரியர்களினது ஒத்துழைப்பையும் பெற்றே இக் கருத்தரங்கினை நடாத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

அரசினர் மொழித் திணைக்களப்பிரிவு, பல்கலைக்கழகங்கள், இலங்கைவிஞ்ஞான விருத்திக்கழகம், கல்வித் திணைக்களத்தொழிற்றுறைப் பிரிவு, இலங்கை வானொலி கல்விப்பிரிவு ஆகிய நிறுவனங்களையும் இக்கருத்தரங்கிற் கலந்துகொள்ளுமாறு அழைப்பதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

மேற்படி கருத்தரங்கத்தில் இடம்பெறவிருக்கும் புத்தகக்கண்காட்சியில் இதுவரை தமிழில் வெளியாகிய பாட, துணைநூல்களைத் தந்துதவுமாறு வெளியீட்டாளர்களை விரைவில் தொடர்பு கொள்ளப்படுவரெனவும் மேலும் விபரங்கள்வேண்டுவோர் செயலாளர் "அறிவொளி" 85-9 யோசப் ஒழுங்கை கொழும்பு-4 எனும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவன் பிடித்த ஐந்தடி முதலை

காங்கேசன்துறை, வியா.

கல்வியங்காட்டிலுள்ள வட்டக்குளத்தில் கல்லூரி மாணவன் ஒருவன் ஐந்தடி நீளமான முதலையொன்றைப்பிடித்துள்ளான்.

பதினைந்து வயதுள்ள எஸ். யோகேஸ்வரன் என்ற இம்மாணவன் முதலை குளத்திலிருந்து வெளியே வந்த பொழுது அதனைச் சாதுரியமாக கயிற்றினுல் கட்டிப் பிடித்துவிட்டதாகக் கூறப்பட்டது.

## நாட்டிலும் நகரிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுக்க வெளிநாடுகளிலிருந்து வரும் சிகரெட்டுகளுக்கும் ஏன் ஊக்கம் அளிக்கவேண்டும்?

யாழ்ப்பாணம் புகையிலையில் நல்ல மணம் குணமும் காரமும் இருக்கத்தக்கதாக நமது மக்கள் சிகரெட்டை விரும்புவது சிகரெட் வெள்ளைநிறமுள்ளதாயும் சுருட்டு கறுப்புநிறமுள்ளதாயும் இருப்பதாலோ, அல்லது சிகரெட் காற்சட்டை போன்ற மேனுட்டு சின்னங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதாலோ என்பது தெரியவில்லை.

மேலைத்தேசங்கள் இந்த நூற்றுண்டின் தலைசிறந்த திருமகனெனப் போற்றும் காலஞ்சென்ற சேர் வின்ஸ்டன் சேர்ச்சிலும், கியூபா தேசத்து புரட்சிவீரர் பிடல் காஸ்ரோவும் சுருட்டுப் பிடிக்கவில்லையா? இத்தகைய பெருமை வாய்ந்த புகையிலை சுருட்டை நம்மூர் மக்கள் ஏன் இழிவானதாகக் கருதவேண்டும்?

இலங்கை மக்கள் இங்கு உற்பத்தியாகும் சுருட்டுகளையே உபயோகிக்கவேண்டுமென்று ஓர் இயக்கத்தை நடாத்தவேண்டும். வெளியூர் சிகரெட்டுகளை பகிஷ்காரம் செய்யவேண்டும். மாஞ்செஸ்டர் மில் துணிகளை எதிர்த்து மகாத்மாகாந்தி பிரசாரம் செய்தபடியினுலன்ரே இன்று பம்பாயிலும் மதுரையிலும் ஆமதபாத்திலும் பல்லாயிரக்கணக்கான ஆலைகள் தோன்றி ஆயிரக்கணக்கானவருக்கு வேலைவாய்ப்புகிடைத்திருக்கிறது. அதுபோல இங்கும் ஒரு பிரசாரஇயக்கம் நடந்தால் யாழ்ப்பாணத்திலும் நீர்கொழும்பிலும் தாமன் கடவையிலும் கூடுதலாக சுருட்டுத்தொழிற்சாலைகள் தோன்றி நம்மூரவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதோடு நம்மூர்ப்பணம்வெளியூர்களுக்குப் போகாமலும் தடுக்கலாம்.

இந்தவிஷயத்தில் நமது அரசியல் தலைவர்களுடன் சுருட்டு தொழிலாளர் சங்கங்களும் சமூக சீர்திருத்த சங்கங்களும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும்.

-- வழிப்போக்கன்

ஆசிரியருக்குக் கடிதம்

## 'பணிஸ்' படும்பாடு

வல்வெட்டி, உடுப்பிட்டிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் வழங்கப்படும் 'பணிஸை' உதைபந்தாட்டத்துக்கும், கைப்பந்தாட்டத்துக்கும் மாணவர்கள் பாவித்து வருகின்றனர். இந்த அதிசயத்தைத் தினமும் இங்கு பார்க்கக்கூடியதாக இருக்கிறது. "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டால் வண்டும், புழுவும், கல்லும் நிறைந்த பணிஸை எப்படிச் சாப்பிடுவதென்று எதிர்க்கேள்வி போடுகிருர்கள். ஒரு மாணவர் கையும் மெய்யுமாகப் பணிஸ் ஒன்றைக் கொண்டுவந்து புழு இருப்பதைக் காட்டினுர்.

மாணவர்களுக்காக நல்லெண்ணத்துடன் அரசாங்கம் வழங்கும் பணிஸில் இப்படியானவை இருப்பதால் அது உபயோகமற்றதாகிவிடுகிறது. நல்ல நோக்கமும் நிறைவேருமல்போய் விடுகிறது. ஆசிரியர்களிடம் கூட, பலமுறை மாணவர்கள் இதைபற்றிப் புகார்செய்ததாகவும் தெரியவருகிறது. ஆனுல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

இப்படியான கல்லும், புழுவும் இருப்பதற்கு யார் காரணமென்பதைக் கண்டுபிடித்து, நிவர்த்திசெய்வதில் பிரச்னை எதுவுமில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவர்களுக்கு நல்ல பணிஸ் கிடைக்க உதவி செய்யவேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

சு. கனகலிங்கம்
கிராமசபை அங்கத்தவர்
(உடுப்பிட்டி)
வல்வெட்டித்துறை

## முதலாளி தொழிலாளி.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டன. ஆனல் கைத்தொழில் கோர்ட்டுகளிலும் அதிகமாக இதே துரதிஷ்ட நிலைதான் தொழிலாளியை எதிர்நோக்கியுள்ளது.

இங்கும் முதலாளிகளின் பணபலமும், சமூகத்தில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஸ்தாபனமும்தான் கையோங்கி நிற்கின்றன.

### தொழிலாளர் நிலை

உதாரணமாக, ஒரு கொம்பனியில் கடமையாற்றும் தொழிலாளி ஒருமாத முன்னறிவித்தலுடன் யாதிய காரணமின்றி வேலையிலிருந்தும் நீக்கப்படுகிருர் என்று வைத்துக் கொள்வோம். முதலாளியிடம்லட்சக்கணக்கில் பணமுண்டு. அத்துடன் அவருக்குச் சட்ட மன்றம் ஏறி இறங்க வசதியும், நேரமும் உண்டு தொழிலாளியின் நிலையோ அப்படியல்ல. அதுவும் அவர் ஒரு குடும்பத்தலைவராயின் நிலைமை மிகவும் கஷ்டமாகவிருக்கும்.

முதலாவதாக, அவருக்கு வேலை போய் விட்டதும், அன்ருட வாழ்க்கைச் செலவுக்குவேறு ஏதாவது வழி பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதுவே அவரது முதலாவது கடமையுமாகிறது. ஆகவே, வேலைநீக்கம் செய்த முதலாளிக்கெதிராகக் குற்றம் சாட்டவோ, அக்குற்றத்தை நிருபிக்கவழிவகைகள்தேடவோ அவருக்கு அவகாசம்கிடைப்பது அரிது. அப்படிக்கிடைத்தாலும், அவர் எதையும் தனியாகச் செய்யமுடியாது இதற்கு அவர் ஏதாவது தொழிற் சங்கத்தின் உதவியை நாட வேண்டி வரும் அதற்கும் முதலில் அவர் அத் தொழிற் சங்கத்தில் அங்கத்துவராக இருக்க வேண்டும். அதற்கு அவர் வேலை பார்க்கும் இடத்தில் தொழிற் சங்கமொன்று இருக்க வேண்டும்.

சில கொம்பனிகளில்தொழிற்சங்கமெதுவும் அமைக்க விடாது. ஊழியர்களை அக் கொம்பனி முதலாளிமார் மிரட்டல் மூலமாகவும், தந்திரோபாயங்கள் மூலமாகவும் தடுத்து விடுகின்றனர். இந் நிலையில், எக்காரணமுமின்றி பொய்க்குற்றம் சாட்டப்பட்டு ஓர் தொழிலாளி அவரை வெறுக்கும் முதலாளியினுல் வேலை நீக்கம் செய்யப்பட்டால், தொழிலாளியின் கதி என்ன? அவர் குடும்பத்தினராயின், அவருடைய குடும்பத்தினரின் கதி என்ன? இந்தக்கேள்விகளுக்கு விடைகாணுதவரை இந்நாட்டு முதலாளி தொழிலாளி உறவு சுமுகமாக அமைய முடியாது.

(நாளைய இதழில் முடியும்)

## 2ம்எதிரி காலஞ்சென்றவரின் தலையில்அலவாங்கினுல் அடித்தார்

### சுழிபுரம் கொலைவழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், வியாழன்

"காலஞ்சென்றவரின் தலையில் இரண்டாம் எதிரி அலவாங்கினுல் அடித்தார். இந்த அடியுடன் காலம் சென்றவர் நிலத்தில் விழுந்து விட்டார். அவரின் நாரியில் முதலாம் எதிரி வாச்சியால் வெட்டினுர். அவ்வாச்சியை பின்னர் அவரால் இழுக்கமுடியவில்லை."

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நெற்சிங்கா முன்னிலையில் சுழிபுரம் கொலைவழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது ஆறுமுகம் பிள்ளையனுர் என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களான மாரிமுத்துதங்கவேலு, வயிரமுத்து மாரிமுத்து, மாரிமுத்துகந்தசாமி, மாரிமுத்து வயிரமுத்து. தம்பையா சுப்பிரமணியம், பாலன் என்றழைக்கப்படும் விருபகர்திபாலசிங்கம் ஆகிய ஆறுபேரும் சென்ற மார்ச் மாதம் 31-ம் திகதி அதே ஊரைச்சேர்ந்த வேலாயுதம் வயிரமுத்து என்பவரை கொலைசெய்ததாகவும், அதேநேரத்தில் பழனிதவத்துரையைக் கத்தியால் வெட்டி அவருக்குக்காயம் விளைவித்ததாகவும், வயிரமுத்து விருபகமூர்த்தியை பொல்லால் அடித்துக்காயப் படுத்தியதாகவும்சங்கானைப் பொலிசாரால் மூன்று குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன.

சங்கானைப் பொலிஸ்சப் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையாவின் உதவியுடன் வழக்கறுஞர் திரு. ரி. தம்பிரத்தினம் வழக்கைநடத்தினுர். எதிரிகள் தரப்பில்திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

ஆறுமுகம் பிள்ளையனுர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நானும் சுப்பையாவும் சுப்பையாவின் காணிக்குள் நின்ருேம். அப்பொழுது காலஞ்சென்றவர் தனது பிள்ளையைக் காணவில்லை என்றுகுழறிக் கொண்டுகிணற்றடியை நோக்கி ஓடிவந்தார். கிணற்றடிக்கு கிட்ட வரும் பொழுது எதிரிகள் வந்து அவரை மறித்தனர். எதிரிகளின் கைகளில் பயங்கரஆயுதங்கள் இருந்தன, முதலாம் எதிரியின் கையில் வாச்சியும், இரண்டாம் எதிரியின் கையில் அலவாங்கும் மூன்றும் எதிரியின் கையில் பொல்லும் நாலாம் எதிரியின் கையில் கோடரியும் ஐந்தாம் எதிரியின் கையில் உலக்கையும் ஆறுவது எதிரியின் கையில் பொல்லும் காணப்பட்டன. காலஞ்சென்றவரை மறித்த எதிரிகளில் முதலில் இரண்டாம் எதிரி அலவாங்கால் காலஞ்சென்றவரின் நெற்றியில் அடித்தார். அவர் அடியுடன் விழுந்து விட்டார். நானும் சுப்பையாவும் சம்பவம் நடைபெற்றஇடத்துக்கு ஓடினேம் முதலாம் எதிரி வாச்சியால் காலஞ்சென்றவரின் நாரியில் வெட்டினுர். ஆனல் அவ்வாச்சியை அவரால் எடுக்க முடியவில்லை. இரண்டாம் எதிரி வாச்சியை ஆட்டிவிட்டு வெளியில் இழுத்தெறிந்தார், நான் எனதுவாயால் இரத்தம் பாயாமல் கட்டினேன். ஐந்தாம் எதிரி ஒரு முறிந்த உலக்கையால் காலஞ்சென்றவரின் நாரியில் அடித்தார் கோட்டில் உள்ள உலக்கையல்ல அது. மூன்றும் நாலாம் எதிரிகள் ஒன்றும் செய்யவில்லை.

மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை இம்மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'உரிமைபெறவே சத்தியாக்கிரகம்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"இன்று சிறுபான்மை இனமக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக இயங்கும் சத்தியாக்கிரக இயக்கம் பற்றி நாட்டில் ஒரு சிலரிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. மாக்சிய சித்தாந்த வாதிகள் இந்த இயக்கத்தை வழிநடத்துகின்றனர் என்ற கருத்தே இதில் முக்கியம் பெற்றிருக்கின்றது. இக் கருத்துத் தவருனது. மாக்சியவாதிகள் ஆயுதப்புரட்சியில் நம்பிக்கையற்றவர்கள் என்ற கருத்தை நம்பினுல் இத்தகைய தவருன எண்ணத்தை எவருங் கொள்ள மாட்டார்கள்.

இவ்வாறு சென்ற புதன் கிழமை சிறுபான்மைமக்கள் விடுதலை இயக்க முன்னணிப் பிரசாரத்தலைவர் கே. டானியல் சுன்னுகம் சந்தை மைதானத்தில் நடைபெற்ற சிறுபான்மை இயக்க சத்தியாக்கிரக கூட்டத்திற் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'சகல தமிழ்த்தலைவர்களும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். இதற்கு முன்னர் இப்படியொருநிலை இருந்ததில்லை. இதற்குப் பின்னும் இப்படியொருநிலை உருவாகுமென்று நிர்ணயிப்பதற்கில்லை. இவ்வேளை சாதிக்கமுடியாத ஒன்றை இனிஎக்காலத்திலும் சாதிக்கமுடியாதென்றே நாம் கருதுகின்ருேம். இந்தச்சந்தர்ப்பத்தில் சகல தலைவர்களும் இப்பிரச்னையைத் தீர்த்து வைக்க முன் வர வேண்டும்''

முன்னணித் தலைவர் திரு. வி. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இணைக்காரியதரிசிகளான திரு. ஜீ. நல்லையா, திரு. எம். சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

## ஒழுங்கைகள் திருத்த ரூ 4800

சுழிபுரம், வியாழன்

சுழுபுரம் கிராம சபையினர் பிரதானஒழுங்கைகளைத் திருத்துவதற்கு ரூபா 4800 பெறுமதியான வேலைஒப்பந்தங்களை ஏற்றுள்ளனர். மிகவும் பழுதடைந்திருக்கும் பாதைகள் திருத்தப்பட்டுச் செப்பனிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கலை விழா

பலாலி, வெள்ளி

காங்கேசன்துறை முற்போக்கு வாலிபர் சங்கத்தின் ஆதரவில் மிகவுப் சிறப்பான முறையில் கலைவிழா நடாத்துவதென காங்கேசன்துறை பட்டினசபையிடல் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கலைவிழா இம்மாத இறுதியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் இப்படியிருப்பதனால்தான் ரயில்சேவையில் தாமதமா?

## ஊழியர்களிடம் மாஜிஸ்திரேட் கேட்டார்

மாவிட்டபுரம், வியாழன் காங்கேசன்துறை புகையிரதநிலையத்தைச் சேர்ந்த எம். டி. பெர்ணண்டோ என்பவருக்கு அதே இடத்தைச் சேர்ந்த வி. ஜி சமரதாசா என்பவர் கத்தியால் வெட்டிக் காயம் ஏற்படுத்தியதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ் நித்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காயமடைந்தவரான எம்.டி.பெர்ணண்டோ சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் இரவு ஒன்பதரை மணி முதல் பத்து மணிக்குள் குவாட்டர்சில் இருந்தேன். அப்போது எதிர்வந்து தூஷணமாகஏசி கத்யாதில் வெட்டினார். கைகளைக்கொடுத்துதடுத்தேன். மீண்டும்வெட்டினார். நான் லொக்கற் போர்மனிடம் போய்ச் சொன்னேன். அவர் பொலிசாருக்கு தகவல் அனுப்பினார். பொலிசார் வந்தனர்.

லொக்கற் போர்மன் கே. திருஞானசம்பந்தன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எனக்கு அன்று ஒய்வு நாள். திரு. அருளானந்தம் கடமையாற்றினார். பங்களாவில் அன்று மாலை இருக்கையில் பெர்ணண்டோ வந்து அமரதாசா தன்னை ஏசி விட்டதாக முறைப்பாடு செய்தார். நான்அமரதாசாவைக் கூப்பிட்டு விசாரணை நடத்தினேன். அப்போது பெர்ணண்டோ பாண் வெட்டும் கத்தியால் வெட்டப் போகத் தடுத்தேன். அப்போது உனது இரத்தத்தை நான் குடிக்காமல் விடப் போவதில்லை என்று பெர்ணண்டோ சொன்னார்.

எதிர் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி, அதிகாரியாக இருந்தும் கீழ் உள்ள ஊழியர்களின் சச்சரவைத் தீர்க்க பொலிசாருக்கு அறிவித்து நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றும் கடமை நேரத்தில் இச்சம்பவம் நடக்காதது தான் இதற்குக் காரணம் என்றும் கூறினார்.

ஊழியர்களாகிய நீங்கள் இப்படி இருப்பதால் தான் ரயில் சேவை தாமதமாக நடைபெறுகிறதுபோலும் என்று மாஜிஸ்டிரேட் குறிப்பிட்டார்.

முத்துராஜாவும் சாட்சியமளித்தார். இம்மாதம் 7-ந் திகதி வரை தீர்ப்பு வழங்குவதற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## சுகாதாரப்பகுதி எச்சரிக்கை

கொழும்பு, வியா.

பேதி கொடுக்கும் மருந்தான உப்பு(எப்சம்சோல்ற்) பற்றி மிக அவதானமாக இருக்கும்படி சுகாதாரப் பகுதி பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

இதில் நச்சு மருந்தும் கலந்துள்ளதாக சந்தேகப் படுவதாலேயே இதுபற்றி அவதானமாக இருக்கும்படி எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மருந்து வியாபாரிகளிடம் மட்டுமே இந்தப் பேதி உடைபை விபரமாகக் கேட்டு வாங்குமாறு கோரப்பட்டுள்

## பிரதமர் டட்லி வலப்பனையில் இன்று வரவேற்பு

கொழும்பு, வியாழன்

பிரதமர் டட்லி சேனநாயக்கா இன்று வலப்பனைத் தொகுதிக்கு விஜயம் செய்கிறார். அவருக்கு 7 இடங்களில் பிரமாண்டமான வரவேற்புகள் அளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இன்று மூலகெல்லை அரசினர் ஆஸ்பத்திரி நிர்வாகப் பகுதியினர் புதிய கட்டடமொன்றுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுவார்.

## காளை ஸ்தானம்

அளவெட்டி, வியாழன்

மாவிட்டபுரத்தில் ஒர் காளை ஸ்தானத்தை வ்வசாயப்பகுதியினர் நிறுவியுள்ளனர்.

பசுக்களுக்கு நவீன முறைப்படி ஊசி போட்டு சினைப்படுத்துவதற்குரிய வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

## வெள்ளக கஷ்ட நிவாரணம்

கொழும்பு, வியா.

கொழும்பிலுள்ள ரொட்டரிச் சங்கத்தினர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதில் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். ரூ 2,600 பெறுமதியான உணவு, உடைகளை இவர்கள் அனுதரவான நிலையிலுள்ளவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

ஃ ஃ ஃ

கொழும்பு, வியா.

கொழும்பிலுள்ள மைமன் சங்கத்தினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடிழந்து, வாழ வழியற்றவர்களுக்கு ஆயிரம் உணவுப் பொட்டலங்களை வழங்கியுள்ளனர்.

ஃ ஃ ஃ

மினுவாங்கொடை, வியா

மினுவாங்கொடை கிறிஸ்ற் கிங் கல்லூரி மாணவர்கள் இப்பகுதியில் வெள்ளத்தால் கஷ்டப்படும் மக்களுக்குப் பெரிதும் உதவி செய்துவருகின்றனர். ஒவ்வொரு இடமாகச் சென்று மக்களுக்கு உதவி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஃ ஃ ஃ

இரத்தினபுரி, வியா.

இரத்தினபுரி மாவட்டத்தில் அனுதரவான நிலையிலுள்ளவர்களுக்கு இரத்தினபுரி அரசாங்க அதிபர் திரு டபிள்யூ. பத்திராஜ உதவி செய்துவருகிறார். நிதி திரட்டி அதன்மூலம் உடை, உணவு வழங்கி வருகின்றார்.

# 'மந்திரிபதவி முக்கியமல்ல; மக்கள் சேவைதான் முக்கியம்'

## தி.மு.க.மகாநாட்டில் அண்ணுபேச்சு

வத்தலக்குண்டு, அக். 6

'மந்திரிப் பதவியை நாங்கள் துச்சமாக மதிக்கிறோம். மந்திரிப்பதவி இல்லாமலே எங்களுக்கு மக்களிடம் மதிப்பு இருக்கிறது. சிவபெருமான் கருணையினால் மதுரை பாண்டியனுக்கு 32 பன்றிக் குட்டிகள் மந்திரியானதாக திருவிளையாடல் புராணம் கூறுகிறது ஆகவே ஆண்டவன் அருள் இருந்தால் மிருகங்கள்கூட மந்திரியாகலாம் மந்திரிப் பதவி எங்களுக்கு முக்கியமல்ல. மக்களின் சேவைதான் முக்கியம்.

வத்தலக்குண்டில் நடைபெற்ற தி மு. க. தேர்தல் மகாநாட்டில் திரு. சி. என். அண்ணுதுரை பேசும்போது மேற்கண்டவாறு கூறினார். இந்த மகாநாட்டின் ஊர்வலத்தில் 5.000 சைக்கிள்களும், 1000 மோட்டார்சைக்கிள்களும் பலயானைகளும் கலந்து கொண்டன, ஊர்வலம் 3 மைல் நீளத்திற்கு இருந்தது

திரு. அண்ணுதுரைமேலும் கூறியதாவது:-

எங்களுக்கு ஆண்டவன் நீங்கள்தான். உங்களால் எவரையும் மந்திரியாக்கமுடியும் ஆணையிடும் அதிகாரம் பெற்றவர்கள் மக்களாகிய நீங்கள்தான்.

இன்னும் 10 ஆண்டுகள் காங்கிரஸ் ஆளட்டும். அதனால் ஏற்படும் துன்பங்களை ஏற்கத்தயார் உங்களால் கூறமுடியுமானால் அதைத் தடுக்க நாங்கள் தயார். ஆனால் காங்கிரஸ் சர்வாதிகாரம் ஒழிக்கப்படவேண்டுமென்று நீங்கள் கருதினால் இன்று முதல் மும்முரமாகப் பாடுபடவேண்டும்.

உண்மையான சோஷலிஸ அரசை அமைக்க எங்களைவிட சிறந்த துணை எங்கிருக்க முடியும்? ஆகவே 67-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் நாம் முழு சக்தியையும் திரட்டிப் போராடவேண்டும். நாம் முழு மூச்சாகப் பணியாற்றினால், காங்கிரஸ் எத்தனை கோடி பணம் செலவிட்டாலும் வெற்றிகாண முடியாது.


# அசலான பானம் அருந்துங்கள்
# யானை மார்க் பானம் அருந்துங்கள்




இடாம் விளையாட்டு, சீட்டாட்டம், தாயம் உருட்டல் இவற்றின்போது, குளுமையான மலர்ச்சியூட்டும் யானைமார்க்குளிர் பானங்கள் உங்கள் சோர்வைநீக்கி, உங்களுக்கு அவதானத் திறமையை அளிக்க உதவுகிறது. யானை மார்க் குளிர் பானங்கள் வழங்கிஉங்கள் நண்பர்களையும் விருந்தினரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துங்கள். அவை, அவர்களின் வரவை ஆனந்தகரமாக்கும்.

வெளி மைதானங்களில் விளையாடி வெயர்த்துக் களைத்துத் தாகமடைந்து தவிக்கும்போது, உங்கள் தண்ணீர் விடாயைத் தணித்துக் குளுமையூட்டத் தலை சிறந்தவை யானை மார்க் குளிர் பானங்களே! குளுமையான, சுவைமிகுந்த துல்லியமான, அவையே, இன்று கிடைக்கக் கூடிய மிக உன்னதமான குளிர் பானங்கள்.

CCS.

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
கோழும்பு. கண்டி. திருமலை
GRANTS/


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பண்டையக் கலாச்சாரத்தை நாம் பாதுகாக்கவேண்டும்"

## பரிசளிப்பு விழாவில் மாவட்ட நீதிபதி பேச்சு

மாவிட்டபுரம், வியா.

"நாம் எமது உயர்ந்த இலட்சியங்களைக் கைவிட்டு வருகிறோம். இன்று எமது வாழ்வில் உலோகாயுதமும், எவ்வகையிலும் பணம் சம்பாதிக்கும் ஆசையும் ஆடம்பர வாழ்க்கை நடத்தும் விரும்பமும் முக்கிய இடத்தைப் பெற்று உள்ளன. இவற்றின் கொடூரமான செல்வாக்கு வளர்ந்து வருவதனால் தமிழருடைய வாழ்க்கை முறையின் முக்கிய அம்சமான எளிமைக்கும் அதன் தூய தன்மைக்கும் பங்கம் விளையும்" என்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. செல்வி சாவித்திரி சுவாமிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திரு. வி. எம். குமாரசாமி தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

தமிழருடைய சிறிய வாழ்க்கைக்கு காரணகர்த்தாவாகவுள்ள திருவள்ளுவர் தனது குறளில் கூறியுள்ள உயர்ந்த இலட்சியங்களைக் கடைப்பிடித்து வாழ்வதே எமது வாழ்வின் முக்கியநோக்கமாக இருக்கவேண்டும். "மிகுந்த கட்டுப்பாட்டுணர்ச்சியும் உண்மையான அபிலாஷையும் தன்னலம் கருதா ஈகையும், உயர்ந்த நோக்கும் எமது சிறந்த நூல்களால் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன" என்று போப் ஐயர் கூறியுள்ளார். உயர் நெறிகளைக் கூறும் பல இலக்கியங்களைப் படைத்து மகிழ்ந்த ஓர் இனத்திற்கு நல்லதொரு காலம் உண்டு என நம்புகிறார்.

வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்திலிருக்கும், இளைஞர்களாகிய உங்கள் அனைவருக்கும் தமது மூதாதையர் வாழ்ந்த இந்தஇலட்சிய வாழ்க்கையை இன்று நினைவூட்ட விரும்புகிறேன். இந்த இலட்சியங்களை நாம் என்றும் மனதில் இருத்தி அவற்றை நம் வாழ்வில் அடைய முயற்சி செய்தல் வேண்டும். இம்முன்னோர்கள் இந்த இலட்சியங்களை ஓரளவிற்காவது கடைப்பிடித்து வாழ்ந்தமையினால் தான் தமிழ் நாகரிகம் இறந்து ஒழிந்துபோகாமல் இன்றும் நிலைத்து இருக்கின்றது.

நாம் எமது முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களைப் பேணிப்பாதுகாத்தும் மேலைத்தேச மக்களின் வாழ்க்கை முறைகளிலும், கலாச்சாரத்திலும் உள்ள சிறந்த அம்சங்களை ஏற்றும் வாழவேண்டும். எமது முன்னேற்றத்திற்கு நாம் உழைக்கும் அதேவேளையில் உலக நாகரிக வளர்ச்சிக்கும் உலகமக்களின் நல்வாழ்வுக்கும் கடமைகளை தவறாது செய்தல்வேண்டும். வரும் சந்ததியினரை எமக்கு கடமைப்பட்டவர்களாக்குவதன் மூலமே மறைந்த சந்ததியினருக்கு நாம் எமது நன்றியைச் செலுத்தமுடியும். வாழ்க்கையின் அழியாத உண்மைகளையும், இலட்சியங்களையும் என்றும் கருத்திற்கொண்டு நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்."

திரு. ஆ. வி. மயில்வாகனம் ஸ்தாபகர்தின உரை நிகழ்த்துகையில், நல்லன செய்தவர்களை எக்காலத்தும் சிந்திக்க வைக்கக்கூடிய வகையில் நினைவுச் சின்னங்கள் இருக்கவேண்டும். நாட்டுக்கும் தமிழ்ப்பிள்ளைகளுக்கும் என்றும் ஞானச்செல்வத்தை ஊட்டிவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தையா உபாத்தியாருக்கு தகுந்த நினைவுச் சின்னம் என்றும் குறிப்பிட்டார்.

திரு. நா. சி. கந்தையா நன்றி கூறினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# 'சமூக ஏற்றத்தாழ்வு அகற்றப்படவேண்டும்'

## முத்தமிழ் மன்றத்தில் பேச்சு

சுழிபுரம், வியாழன்

"இறைவன் படைப்பில் எல்லோருஞ் சமமே; அவன் திருவுளத்துக்கு முரணாக வாழ்ந்து பழி தேடி வாழ்வது எமது பிறப்பின் நோக்கமல்ல. ஹரிசனங்கள் அரசியல் வாதிகளின் கைப்பொம்மையாகி நாட்டிற் குழப்பத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை ஏற்படாதவகையில் உயர்சாதி மக்கள் மனம் மாறவேண்டும். சமூக ஏற்றத்தாழ்வை பூரண உள நெகிழ்ச்சியுடன் அகற்றவேண்டும்" மேற்கண்டவாறு காந்தி ஜெயந்தியன்று சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புசம்பந்தமாக திரு. த. இரத்தினம் பண்டைத்தரிப்பு இந்துக்கல்லூரி முத்தமிழ் மன்றத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"பாரதியும் தீண்டாமையும்" என்னும் பொருள்பற்றிப்பேசிய பண்டிதர் அ. ஆறுமுகம் தமது பேச்சில் குறிப்பிடுகையில் "தொழில் முறையால் தோன்றிய பிரிவுகள் சாதிகளென்ற சாபக்கேடாய் தமிழ் நாட்டில் நிலைத்து விட்டன. வாழ்க்கையை வளம் படுத்தும் ஒவ்வொரு தொழிலும் மனித வாழ்வுக்கு அத்தியாவசியமானதும் பிரதானமானதுமேயாகும். தொழில் காரணமாக ஒருவரை ஒருவர் இழிவு கூறும் வழக்கம் மாறவேண்டும். உயர் குலமாகிய பிராமணவம்சத்துதித்தபுதுமைக் கவி பாரதியே, ஹரிஜனங்களுக்கு விடுதலையளிக்க வேண்டுமென்றுமுழங்கினார் ஹரிசனங்களுக்கு விடுதலையளிப்பது மனித அடிப்படை உரிமையைக் கொடுப்பதேயாகும்" என்றார்.

ஆசிரியர் திரு. மு. பொன்னம்பலம் பேசுகையில் மனிதனை மனிதனாக மதிக்கும் மாண்பே சமூக ஏற்றத்தாழ்வை ஒழிப்பதன் பயனாகும். ஹரிசனங்களும் கடவுளின் சிருஷ்டியே. அவர்களும் இறைவனின் அருமைப் புதல்வர்களாவர். இக் கருத்தை எல்லோரும் உணர வேண்டும், உணர்ந்து வாழ்க்கையில் நடக்க வேண்டும் என்பதற்காகவே, தாழ்த்தப்பட்ட மக்களை காந்தி அண்ணல் ஹரிஜனங்களென அழைத்தனர். ஒரு ஹரிஜனப்பையனையே தன் குடும்பத்தில் ஒருவராகச் சேர்த்தும் கொண்டார்."

செல்விகள் சி. தனலட்சுமி க. கலாவதி, பொ. ம[illegible]வரி, செல்வன் க. வே[illegible]ன் முதலியோரும் பேசினர்.

# பாடசாலைகள் விளையாட்டுச்சங்க 2;3-ம்பிரிவு உதைபந்தாட்ட போட்டிகள்

## யாழ். மத்திய கல்லூரி அமோக வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவிலான 2-ம் 3-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் 2-ந் திகதி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளன. கல்லூரி மைதானங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இப்போட்டிகளில் முதலாவது போட்டி நீர்வேலி அத்தியார் இந்துவுக்கும் யாழ். மத்தியகல்லூரிக்குமிடையே நடைபெற்றது. காரசாரமாக நடைபெற்றஇம்மூன்றும்பிரிவுப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரிஇடைவேளைக்கு முன் 3 கோல்களும் இடைவேளையின்பின்னர் 5 கோல்களுமாக அடித்து (8—0) அத்தியார் இந்துவைத் தோற்கடித்தது. இப்போட்டி நீர்வேலியில் நடைபெற்றது.

### வெற்றி தோல்வியில்லை

கனகரெத்தினம் மகாவித்தியாலயத்துக்கும் உரும்பராய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 2-ம் பிரிவுப்போட்டி யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில்எதிர்பாராதவிதமாக ஒரு கோஷ்டியுமே ஒரு கோலும் போடவில்லை. இருசாராரும் விட்டுக்கொடுக்காமல் திறமையாக விளையாடியதே இம் முடிவுக்குக் காரணமாகும். 3-ம் பிரிவுப் போட்டியில் இடைவேளைக்கு முன்னர் கனகரெத்தினம் மத்தியமகாவித்தியாலயம் ஒரு கோலும் இடைவேளைக்குப் பின்னர் உரும்பிராய் ஒரு கோலும்போட்டு இப்போட்டியும் 1—1 ஆக வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

### யாழ். இந்து வெற்றி

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தும் யாழ். இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 3-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் திறமையாகப் போட்டியிட்ட யாழ். இந்துக்கல்லூரி நெல்லியடி மகாவித்தியாலயத்தை வெகு சுலபமாக 5—0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி ஆரம்பத்தில் இருந்துமுடிவு வரையும்மட்டரகமாகவே காணப்பட்டது. நெல்லியடிக்கோஷ்டியின் விளையாட்டுத்தரம் எதிர்க் கோஷ்டியிலும் பார்க்ககுறைவாகஇருந்ததேஇம் முடிவுக்குக் காரணமாகும். நெல்லியடிமகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ந. ஜேராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### யாழ். மத்திய கல்லூரி வெற்றி

யாழ். இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும்இடையே நடைபெற்றசினேகபூர்வமான 2-ம், 3-ம் பிரிவுஉதைபந்தாட்டபோட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. முதலில் நடைபெற்ற 3-ம் பிரிவுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 4—1 கோல்களால் யாழ். இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் யாழ். இந்து ஒரு கோலும் பெறாத வகையில் மத்திய கல்லூரி ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற போட்டி மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இருசாராருமேஒருவர்கொருவர் விட்டுக்கொடுக்காமல் வேகமாக மோதினர். எனினும் மத்திய கல்லூரி அடுத்தடுத்து 3 கோல்கள் பெற்ற நேரத்தில் யாழ். இந்து ஒரு கோல் பெற்றது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு திரு. பி. மகேந்திரன் மத்தியஸ்த்தராகக் கடமையாற்றினர்.

### யாழ். இந்துக்கல்லூரி

இப்போட்டியை அடுத்து நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டி ரசிகர்களை மிகவும் கவர்ந்திருந்தது. இருசாரரின் சிறந்த விளையாட்டுத் தரமே இதற்கு மூல காரணமாகக் காணப்பட்டது காரசாரமாக ஆரம்பமான இப்போட்டியில் இருசாராருமே விட்டுக்கொடுக்காமல் பலமாகமோதினர் இடைவேளைவரைக்கும் நடைபெற்ற போட்டியில் ஒருவருமே கோல் போடாதது போட்டியின் தரத்தை எடுத்துக்காட்டியது. யாழ். இந்து எதிர்பாராதவிதமாக சூட்டோடு சூடாக அடுத்தடுத்து 3 கோல்களை வெளுத்துவாங்கியது. மத்திய கல்லூரியின் கோல்காப்பாளரின் வலிமையினமே இதற்குக் காரணமாக அமைந்தது. மத்தியகல்லூரியின் முன்னணி வீரர்களின் விளையாட்டு பாராட்டக் கூடியது. இப்போட்டி முடிவில் யாழ். இந்து 3—0 கோல்களால் மத்திய கல்லூரியை வென்றது. இப்போட்டிக்கு திரு. ஆர். சச்சிதானந்தம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# பிரமச்சாரிகள் தோல்வி

யாழ்ப்பாணம், வெள்ளி

குருநகர் ஆரோக்கியநாதர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் பிரமச்சாரிகள் கோஷ்டிக்கும் சம்சாரிகள் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகித பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சம்சாரிகள் கோஷ்டி பிரமச்சாரிகள் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இடைவேளையின் போது ஒரு கோஷ்டியுமே கோல்கள் போடவில்லை. இடைவேளையின் பின்னர் சம்சாரிகள் தமது முழுப்பலத்துடன் பிரமச்சாரிகளுடன் மோதினர். இவர்களின்விளையாட்டு ரசிகர்களுக்கு சிரிப்பை உண்டாக்கியது, ஞானப்பிரகாசம் அருளப்பு, வேதநாயகம், கோல்ககாப்பாளர் செல்லம் ஆகியோரின் விளையாட்டு பாராட்டக் கூடியது. பிரமச்சாரிகளில் பிறேடா, வின்சஸ்லெஸ், சிறில் ஆகியோர் விளையாட்டு ரசிக்கத்தக்கது. இப்போட்டி முடிவில் சம்சாரிகள் 1-0 கோலால் பிரமச்சாரிகளைத் தோற்கடித்தனர். இப்போட்டிக்கு திரு. சந்திரசேகரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# பால் விநியோகம் நீடிப்பு

சுழிபுரம், வியாழன்

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தினர் அமைச்சரைப் பேட்டி கண்டதின் பலனாக மேலும் மூன்றுமாத காலத்துக்கு பால் விநியோகம் செய்வதற்கு அனுமதிகிடைத்துள்ளது. வலிகாமம் மேற்குஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தினர் தினமும் 1500 பைந்த பாலைக் காலை மாலை விநியோகம் செய்துவருகின்றனர். சுமார் 250 குடும்பங்கள் இச்சங்கத்தின் உதவியால்குடும்பசீவியம் நடாத்துகின்றனர்.

# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாண விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான ஒரு கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி 6-ம் திகதி ஆரம்பமாகியது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்நடைபெறும் இப்போட்டியில் கோப்பாய் கேஜேர்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரி, சுடர்படைக் கோஷ்டி, பொலிஸ்கோஷ்டி, சென்ற். பற்றிக்ஸ் பழைய மாணவர் கோஷ்டி, வெஸ்லி கில்ட் கோஷ்டி, வை. எம். சி. ஏ கோஷ்டி, யாழ். தெரிவுக் கோஷ்டி ஆகியன பங்கு பற்றுகின்றன.

இப்போட்டிகளை அடுத்து அகில இலங்கை கூடைப்பந்தாட்டப்போட்டிகளை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போட்டிகளில் இலங்கைக் கூடைப்பந்தாட்ட வீரர்கள் அனேகர் பங்கு பற்றுவர்.

இன்றைய பத்தி உலகில்
சிறந்து விளங்குவது

லீலா ஜவ்வாது
பத்திகளே!

இல்லங்கள் - தேவாலயங்கள்
மற்றும்
எல்லா வைபவங்களுக்கும்

உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!
எங்கும் கிடைக்கும்

ஏகவிநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும்
மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்
போன்: 541
Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பௌத்த குருமார்களை அரசியலுக்கு இழுக்காதீர்"

## பௌத்த சங்கம் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

பௌத்தஆராக்ஷயஎன்ற பௌத்தசங்கம் பௌத்த குருமார்களை அரசியலில் ஈடுபடுத்த வேண்டாமென்று எல்லா அரசியல் தலைவர்களுக்கும் ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளது.

பௌத்த குருமார்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இச்சங்கம் எதிர் வரும் இடைத் தேர்தல்களையும் குறிப்பிட்டு அத்தேர்தல்களிலும் அரசியல் காரணங்களுக்காக தலைவர்கள் மதகுருமார்களை அரசியல் போதனைக்காக அழைக்கக் கூடாதென கோரியுள்ளது.

அரசியல் தலைவர்கள் வேண்டுகோளை ஏற்று தங்களுடன் ஒத்துழைக்கவேண்டுமெனவும் மதகுருமார்களுக்கு அரசியல் நாட்டம் ஆபத்தானதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "கணவன் இல்லாதபோது எதிரிகள் வந்தனர்"

## பலாத்கார வழக்கில் சாட்சியம்

வவனியா, புதன்

"இரவு 7 மணிக்கு எதிரிகளில் இருவர் வளவுக்குள் வந்து கணவன் எங்கே என்று கேட்டனர். அவர் சென்றுவிட்டார் என்று கூறி, அவர்களைப் போகுமாறு கூறினேன். இருவரும் வீட்டுக்குள் வந்தனர். ஒருவர் என்னைப் பலாத்காரம் செய்தார்."

வவனியா பனிக்கநீராவியைச் சேர்ந்த வள்ளியம்மை என்ற பெண்ணைக் கெடுத்ததாக 6 பேர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று காலை வவனியா மாஜிஸ்திரேட் திரு. பரமகுரு முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் 66ம் ஆண்டு ஜூலை மாதம் 20ந் தேதி வவனியாவில் கணபதிப்பிள்ளை செல்லத்துரை, கணபதிப்பிள்ளை பொன்னையா, சண்முகம் கந்தையா, கனகசபை, சிவராசா, சிவக்கொழுந்து தில்லையம்பலம், வீரபாகு கதிர்காமு ஆகியோர் சட்டவிரோதமாகக் கூடியதாகவும், எதிரிகளில் ஒருவர், பனிக்கநீராவியைச் சேர்ந்த 26 வயதான துரைராசா பெண் வள்ளியம்மையைக் கெடுத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புரக்டர் ஐயாத்துரை, புரக்டர் ரெஜினோல்ட் ஆகியோரின் அனுசரணையுடன் வழக்கை நடத்தினார்.

வள்ளியம்மை மேலும் கூறியதாவது:

"சம்பவம் நடைபெற்ற தினம் 6 அல்லது 7 பேர் எனது வளவுக்குள் வந்து கணவன் எங்கேயென்று கேட்டனர். அவர் வெளியில் சென்றுவிட்டாரென்று கூறினேன். இரவு 7 மணியளவில் மீண்டும் எதிரிகளில் இருவர் வந்து கணவன் எங்கேயென்று கேட்டனர். அவர் வெளியில் சென்றுவிட்டாரென்றும், அவர்களைப் போகும்படியும் கூறினேன். இருவரும் வீட்டுக்குள்ளே வந்தனர். ஒருவர் விளக்கை அணைத்தார். மற்றவர் என்னைப் பலாத்காரம் செய்தார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரஹ்மான் சாட்சியமளிக்கையில் வள்ளியம்மை மீது காயங்களெதுவும் காணப்படவில்லை என்று கூறினார். துணிகள் அரசாங்க ரசாயனப் பரிசோதகருக்கு, பரிசோதனைசெய்ய அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாஜிஸ்திரேட் விசாரணையை நவம்பர் 2ந் தேதிக்கு ஒத்திவைத்தார். விசாரணையைப் பார்ப்பதற்காக பெருந்திரளானோர் கோர்ட்டுக்கு வந்திருந்தனர்.

## புரக்டர்-முதலியார் தாக்குதல் வழக்கு 16-ல் விசாரணை

யாழ்ப்பாணம், வியாழன்

சாவகச்சேரியில் புரக்டர் ஒருவரைத் தாக்கியதாக, கோர்ட்டு முதலியார்மீது குற்றஞ்சாட்டி சாவகச்சேரி பொலிசாரினால் தொடரப்பட்ட வழக்கு, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் இம்மாதம் 16-ம் தேதி விசாரணை செய்யப்படும்.

இவ்வழக்கை விசாரணை செய்வதற்காக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வழக்கில் சாவகச்சேரி கோர்ட்டு வளவிற்குள் இவ்வருடம் ஜூலை மாதம் 14-ம் தேதி புரக்டர் ரி. பாலகிருஷ்ணனை, மாவட்ட நீதிமன்ற முதலியார் பி. வேலாயுதம்பிள்ளை தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## பெண்களை அனுமதிக்க வேண்டாம்

கொழும்பு, வியாழன்

வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களில் பெண்களை கல்வி பயில அனுமதிப்பதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதற்கு இலங்கை பௌத்த அராக்ஷ பலமண்டலம் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றது.

பௌத்த பிக்குகளுக்கென தனியாக பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்ட பின்னரே மாணவிகள் அனுமதிக்கப்படவேண்டுமென்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த பல்கலைக்கழகங்களுக்கு பெண்கள் அனுமதிக்கப்பட்டால் அதன் விளைவு பயங்கரமாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பம்பாய் வாத்து!

சைப்பிரஸ், அக். 5

சைப்பிரஸிலுள்ள கிராமமொன்றில் வேட்டைக்காரர் ஒருவர் சுட்டுவீழ்த்திய வாத்தின் காலில் 'பம்பாய்' என்று எழுதப்பட்ட ஒரு வெள்ளித்தகடு இணைத்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. பம்பாய் வாத்து இவ்வளவு தூரம் வந்திருப்பது பெருத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 'லூனா 11'

மாஸ்கோ, அக். 5

சந்திரனை நோக்கி ஆகஸ்ட் 28ல் ரஷ்யா அனுப்பிய 'லூனா 11' வான்வெளிக்கலம் சந்திரனைச் சென்றடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## வைத்திய அதிகாரிக்கு பிரியாவிடை

நெடுந்தீவு, வியாழன்

"நீங்கள் எனக்களித்த அன்பை நான் என்றும் மறக்கமாட்டேன். இதேபோல் எனக்குப் பதிலாக இங்கு புதிதாக வரும் வைத்திய அதிகாரிக்கும் நீங்கள் அன்பு காட்டுவீர்களென நம்புகிறேன்"

இவ்வாறு ஒரு வருட காலமாக நெடுந்தீவில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் டாக்டர் எஸ். வேதநாயகத்துக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடையில் அவர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திரு என். குருநாதர், வண. சாமுவேல் ஆகியோர் உட்படப் பலரும் பேசினர்.

கூட்டத்திற்கு கிராம சபைத்தலைவர் திரு. ம. கணபதிப்பிள்ளை தலைமை தாங்கினார்.

## பஸ் தொழிலாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பஸ் போக்குவரத்துச் சபைத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இம்மாதம் 12ந் தேதி ஆனைப்பந்தி உயர் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் வி. ஆனந்தசங்கரி, எம். மோதிலால்நேரு உட்பட மற்றும் பலர் பேசுவார்கள். பருத்தித்துறை பஸ்டிப்போவுக்கு அருகிலுள்ள மைதானத்தில் மற்றோர் கூட்டம் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. தலைமையில் நடைபெறும்.

## இம்மாதம் அரசாங்க பரீட்சைகள் இரண்டு

உடுவில், வியாழன்

இம்மாதம் அரசாங்கத்தினால் இரு பெரும் போட்டிப் பரீட்சைகள் நாடு பூராவும் நடத்தப்படவிருக்கின்றன. இம்மாதம் 12-ந் திகதி கிராமசேவகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சையும், 19-ம், 20-ந் திகதிகளில் மாணவ ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சையும் அரசாங்கப் பரீட்சைப் பகுதியினரால் நடத்தப்படவிருக்கின்றன. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இவ்விரு பரீட்சைகளுக்குமான அனுமதிப்பத்திரங்கள் பரீட்சைப்பகுதியினரால் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## மாதா திருநாள்

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்டத்தரிப்பில் பரிசுத்த ஜெபமாலை மாதாவின் திருநாள் கடந்த 2-ந் திகதி கொண்டாடப்பட்டது. திருநாளுக்கு முன் நவநாட்கள் சிறப்பாக நடைபெற்றன. இவ்வருடம் திருநாளுடன் ஞானவொடுக்கமும் நடைபெற்றது. ஞானவொடுக்கம் வண. யேசுதாசன் சுவாமியாரால் நடாத்தப்பட்டது.

## இரத்தினபுரிக்கு மாநகரசபை அந்தஸ்து

கொழும்பு, வியாழன்

இரத்தினபுரி நகரசபை மாநகரசபையாக ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தினால் விசேஷ வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் இச்சபை இயங்கும். இச்சபை எல்லைகள் பதினேழு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## சிங்கள-தமிழ்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இராசமாணிக்கம் கலந்து கொண்டார்.

பட்டிருப்பு தொகுதியில், இக்கல்லூரி சிறந்ததாக திகழ்கிறதென்றும். ஒரே தடவையில் 9 மாணவர்கள் இங்கிருந்து சர்வகலாசாலைக்குச் சென்றுள்ளார்களென்றும் கல்லூரி அதிபர் கூறினார்.

குருக்கள் மடம் நெசவு நிலையத்தை மந்திரி தகநாயக்கா திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:

"தேசிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இங்கு வந்துள்ளேன். இந்த நெசவு நிலையங்கள் நல்லமுறையில் செயல்படத் தொடங்கினால் பயனுண்டு. இதன் மூலம் நூற்றுக்கணக்கானவர்கள் வேலைபெறுவார்கள்."

குறுமண்வெளி மாதர் முன்னேற்றச் சங்க நெசவு நிலையத்தில் பேசும்போது மந்திரி தகநாயக்கா கூறியதாவது: "சினிமா நட்சத்திரங்கள்போல இங்குள்ள பெண்கள் காணப்படுகிறார்கள். ஆனால் நான் அவர்களை நெசவு நட்சத்திரங்களாகத் திகழவேண்டுமென விரும்புகிறேன். தேசிய அரசாங்கம் தொடர்ந்து நாட்டின் அபிவிருத்திக்காகப் பாடுபடும்."

இக்கூட்டத்துக்குப் பட்டிருப்புஎம்.பி. இராசமாணிக்கம் தலைமைதாங்கினார்.

## "மாணவமன்றத்தின் முக்கிய கடமை"

கொஸ்லாந்தை, வியாழன்

பாடசாலையில் இயங்கும் மாணவமன்றங்கள் மூலமாகத்தான் மாணவமாணவிகள் நாட்டின் நல்ல பிரஜைகளாக வரமுடியும். பாடசாலைகள்தோறும் மன்றங்களை அமைப்பது வருங்கால நற்பிரஜைகளாக்குவது பாடசாலைக்கடமைகளில் ஒன்றாகும்.

இவ்வாறு கொஸ்லாந்தை பாரதிக்கல்லூரி மூன்றும் தவணைமாணவமன்ற நிர்வாகிகள் கூட்டத்தில் மன்றப் போசகர் திரு. எஸ் ஜெகநாதன் பேசும்போது கூறினார்.

கீழ்வருவோர் மன்ற நிர்வாகிகளாக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் போசகர்: திரு.எஸ். ஜெகநாதன். கல்லூரி அதிபர். தலைவர்: எம். நாராயணன், உபதலைவர்: எஸ். ஆறுமுகம் செயலாளர்: பி. சிவபெருமாள், உபசெயலாளர்கள்: கே. வீரக்கவுண்டன், கே. செல்லையா, எம். சுப்பிரமணியம், ஏ வையாபுரி, ஏ. பொன்னம்பலம். பத்திரிகை ஆசிரியர்: எஸ். சுப்பிரமணியம். உப பத்திரிகை ஆசிரியர்: என். தங்கையா, பொருளாளர்: எஸ். புவனேஸ்வரன்.

## புதுவருட நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, வியா.

கரணவாய், வடக்குகிராம முன்னேற்றச் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வி. வேலுப்பிள்ளை, உபதலைவர்: திரு. கே. கதிரவேலு, காரியதரிசி: திரு. எஸ். கணேசமூர்த்தி, தனாதிகாரி: திரு. ஏ. கே. மாணிக்கம், கணக்குப்பரிசோதகர்: திரு. கே. குணரத்தினம்.

## புதிய நிர்வாகிகள்

இமையாணன், வெள்ளி

உடுப்பிட்டி வல்லை நெசவு ஆலையின் பொதுக் கூட்டத்தின் போது தலைவராக தொண்டமனாற்றைச் சேர்ந்த திரு. வ. இராசசேகரமும், காரியதரிசியாக திரு. எஸ். ஞானமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## நாடகவிழா போட்டி முடிவுகள்

நல்லூர், வியாழன்

கலைக்கழகத்தினர் நடாத்திய நாடகப்போட்டியில் பரிசு பெற்ற நாடகங்கள் வருமாறு:

### நாட்டுக்கூத்து

உத்தமபரதன், வின்சென்ட் மகளிர்கல்லூரி. மீனவர் நாட்டுக்கூத்து: எருக்கலம்பிட்டி மத்தியவித்தியாலயம்

### சமூக நாடகம்

யார் கொலைகாரன்: சந்திரபுரம் ஸ்கந்தவரோதயா, மட்டுவில்.

### வரலாற்று நாடகம்

ஜீவமணி, மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.

(அ) கலிங்கத்துக்காவலன்: பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை, நாவுக்கரசர்: புலோலி ஆண்கள் பாடசாலை.

(ஆ) இரத்தத் துளி: மானிப்பாய் இந்துக்கல்லூரி.

தர்மவிஜயம் என்னும் நாடகத்துக்கு ஆறுதல் பரிசிலும் வழங்கப்பட்டது

## இருளடைந்த வீதி

உடுவில், வியாழன்

உடுவில் - கந்தரோடை சுப்பிரமணியம் வீதி கடந்த பல நாட்களாக மின்சார ஒளியின்றி இருந்து வருகின்றது. இவ்வீதிக்கு அண்மைக் காலத்தில் தான் மின்சாரம் கொடுக்கப்பட்டதாயினும் கடந்த பல நாட்களாக மின் ஒளி அற்றுக் காணப்படுகின்றது. இதனால் இரவு வேளையில் இவ்வீதி வழியாகச் செல்லும் பிரயாணிகள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகின்றார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுத்து மின்னொளிப் பெற்றுத்தர பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சுழிபுரத்தில் காந்தி விழா

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் மறுமலர்ச்சி மன்றத்தினர் மகாத்மா காந்தி விழாவை மிகவும் கோலாகலமாக மானிப்பாய்இந்துக் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடினர். மன்றத் தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் விழாவுக்குத் தலைமைவகித்தார். காந்தியின் வாழ்க்கை வரலாறுகளை பண்டிதை நா. பாக்கியம், பிரமஸ்ரீ க. சண்முகரத்தினசர்மா ஆகியோர் எடுத்துப் பேசினர். செல்வி. சு. இராசரத்தினம் இன்னிசைக்கச்சேரியும் மற்றும் இசைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மன்றச் செயலாளர் திரு. நடேசபாதன் நன்றியுரை கூறினார்.

## பாதசாரிகள் ஜாக்கிரதை

யாழ்ப்பாணம், வெள்ளி

வளவில்கிணறைத்தோண்டுவதனால் எடுக்கப்பட்ட கற்களும்; சகதியும் நீரில் தேங்கியுள்ளமையால் வழிப்போக்கர்களின் உடைகள் பாதிக்கப்படுகின்றன ஆனைப்பந்தி சந்தியிலிருந்துகைலாயபிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் வீதி இத்தகைய துர் நிலையில் கிடக்கின்றது.

சமீபத்தில் பெய்த மழை மேற்படி கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட சேறு சகதிகளுடன் சேர்ந்து வீதியோரத்தால் நடந்து செல்லும்பாதசாரிகள் நடக்க முடியாமலிருப்பதுடன் வாகனங்கள் செல்லும் வேளையில் தெறிக்கும் தண்ணீரால் உடையையும் அழுக்காக்கவேண்டியுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org